# அரச கரும மொழியும்
# தமிழின் நியாயமான
# உபயோகமும்

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்கள் சனப் பிரதிநிதிகள் சபையில் நிகழ்த்திய சொற்பொழிவுகள். சம்பந்தப்பட்ட சட்டங்களும் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளன.

அரசாங்கத் தகவல் பகுதியினால் வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது

141

## பொருளடக்கம்


பக்கம்

மொழித் தகராறு : அதன் பூர்வ வரலாறு .. 1
(1956 ஜூன் 5 ந் திகதியன்று சனப் பிரதிநிதிகள் சபையில் நிகழ்த்திய சொற்பொழிவு)

அரசகரும மொழிப் பிரச்னை : இதன் வரலாறு .. 4
(1956 ஜூன் 6 ந் திகதியன்று சனப்பிரதிநிதிகள் சபையில் நிகழ்த்திய சொற்பொழிவு)

அரசகரும மொழி : அரசாங்கக் கொள்கை .. 14
(1956 ஜூன் 14 ந் திகதியன்று சனப்பிரதிநிதிகள் சபையில் நிகழ்த்திய சொற்பொழிவு)

சிங்களமும் தமிழும் உபயோகித்தல் .. .. 21
(1957 ஜூன் 19 ந் திகதியன்று சனப் பிரதிநிதிகள் சபையில் நிகழ்த்திய சொற்பொழிவு)

தமிழ் மொழிக்குத் தகுந்த இடம் .. .. 26
(1958 ஒகஸ்ட் 5 ந் திகதியன்று சனப்பிரதிநிதிகள் சபையில் நிகழ்த்திய சொற்பொழிவு)

1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க, அரசகரும மொழிச் சட்டம் .. .. .. 33

1958 ம் ஆண்டின் 28 ம் இலக்க, தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் .. .. 35



ஜே. என். ஆர் 17401—5,008 (5/61) அரசாங்க அச்சகம், இலங்கை.

# மொழித் தகராறு: அதன் பூர்வ வரலாறு

*(உத்தியோகமொழி மசோதா சனப் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப் பட்டதன் விளைவாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி காலிமுகத் திடலில் நடாத்திய சத்தியாக்கிரகத்தைப் பற்றியும் அதைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட கலவரங்களைப் பற்றியும் கேள்வி எழுந்தபோது 1956 ம் ஆண்டு ஜூன் மாதம் 5 ம் திகதியன்று சனப் பிரதிநிதிகள் சபையில் ஒத்திவைப் புப் பிரேரணையின் பேரில் நிகழ்த்திய பிரசங்கம்).*

---

இச்சபை விவாதத்துக்கெடுத்துக் கொள்ளச் சந்தேகமின்றி விரும்பி யிருக்குமென நான் உடனடியாகப் புரிந்து கொண்ட ஒரு நிலைமையைத் தெளிவுபடுத்துவதற்கு இவ்வளவு சீக்கிரமாக இச்சந்தர்ப்பத்தை எனக் களித்தமைக்காக இச்சபைக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள் கின்றேன். அவ்வாறே சபை இந்நிலைமையை விவாதிக்கவும் செய்தது. பொறுமை, உள்ளதை உள்ளபடி விளக்கும் தன்மை, மனவெழுச்சி யடக் கம், ஏன் விநோதரசமும் கூட மிகவும் விரும்பத்தக்க அம்சங்களாக விளங்க வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தில், பொதுவாக சபையின் இரு பக்கங் களிலுமுள்ள எனது கௌரவ மிக்க நண்பர்கள் தங்கள் மன வெழுச்சிகளை அடக்கி நடந்து கொண்ட விதத்தையிட்டும் அவர்களுக்கு எனது நன் றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எதிரே வீற்றிருக்கும் எனது அருமை நண்பர்கள் கூறிய பல விஷயங் களைக் குறித்து வெறும் வாதத்துக்குமட்டுமென்றே அனுவசியமாக நீண்ட தோர் பிரசங்கத்தைச் செய்து நிலைமையை இன்னும் மோசமடையச் செய் வதல்ல எனது நோக்கம். ஆனல் சம்பவங்களைப்பற்றிய விளக்கத்தில் காணப்படும் சில தவருன கருத்துக்களையும் சிக்கல்களையும் அகற்ற அவ சியமான மட்டும் இயன்றளவு கனிவுடன் சில வார்த்தைகள் பேச விரும்பு கிறேன்.

எந்தக் கட்சி மீதும் எவ்விதத்திலேனும் பழிசுமத்த நான் விரும்பவில்லை. ஆனல் மொழி விஷயமாக எழுந்துள்ள இந்த ஆபத்தான நிலைமை சந் தேகமில்லாமல் அநேகமாக புத்திபூர்வமின்றி உண்மையில் ஐக்கிய தேசீயக் கட்சியினுலும் முந்திய அரசாங்கத்தினுலுமே ஆரம்பிக்கப் பட்டது. எவரையும் குறை கூறுவதற்காக நான் இதைச் சொல்லவில்லை.

ஆனல், உண்மை இதுவே, எனது அதி கௌரவ நண்பரான முந்திய பிர தம மந்திரி (சேர் ஜோன் கொத்தலாவலை) யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்

செய்தபோது கொக்குவிலில் வைத்து உத்தியோக மொழிகளாக சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்போவதாகவும், இதற்காக அரசியல் சட்டத்தைக் கூடத் திருத்த தாம் தயாராயிருப்பதாகவும் பகிரங்கமாகக் கூறினர். தாம் கூறுவதிலுள்ள சிக்கல்களைப் போதியளவு எண்ணிப் பார்க்காமல் உண்மையில் சந்தர்ப்பத்துக் கேற்றவாறு இதை இவர் செய்தாரென்பதில் சந்தேகமில்லை. தெற்கிலும், ஏன் வடக்கிலும் கூட இவர் ஒரு தீயை மூட்டிவிட்டார். தெற்கில் மொழிப் பிரச்னை அதுவரை குறிப்பிடத்தக்க அளவில் எவ்வித கொதிப்பையும் ஏற்படுத்தாமலிருந்த போதிலும் முதற்தடவையாக, அரசியற் துறையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கெதிரானவர்களுக்கிடையில் மட்டுமல்லாமல் மக்களில் எல்லாப் பிரிவினர்க்கிடையிலும் ஒரு பலத்த இயக்கம் இதனல் ஆரம்பமாயிற்று. இவ்வாருக ஒரு பிரமாண்டமான இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

மொழிப்பிரச்சினையில் ஐக்கிய தேசியக் கட்சி குத்துக்கரணம் அடிக்கவே, வடக்கிலுள்ள என் அருமை நண்பர்களும் கொதித்தெழுந்தனர். அக்கட்சி தன் வாக்குறுதியை மீறியதிலும் பார்க்க மோசமான கபடோபாயத்தை நூறு வருட காலத்திலும் கூட கையாள முடியாதென அவ்வரசாங்கத்தின் உதவி மந்திரி ஒருவர்கூட கூறினர். இரு சாராரும் கொதிப்புண்டனர். குழப்பமான, நெருக்கடியான, மன வெழுச்சிவயப்பட்ட இச் சூழ்நிலையில்தான் கடந்த பொதுத் தேர்தல்கள் நடைபெற்றது. இதில் சிலர் வெற்றி கண்டனர். சிலர் தோல்வியடைந்தனர். இவ்வரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிலைமையல்ல அது. எனது கட்சியின் சார்பில் இப்பொழுது நான் கூறுவது அதுவே. எவரையும் குறை கூற நான் முயலவில்லை. ஆனல் இப்பிரச்சினையின் பூர்வாங்க வரலாற்றினை புரிந்து கொள்ள வேண்டும்.

விதைக்கப்பட்டதை, பிறரால் விதைக்கப்பட்ட வினையை இன்று நாம் நிச்சயமாக அறுத்தாக வேண்டும். இது அவ்வளவு முக்கியமான விஷயம் என்றெண்ணிய ஐக்கிய தேசியக் கட்சி தனது களனி மகாநாட்டில் அதன் முந்திய பிரகடனத்துக்கு மாருக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. நாங்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்த போதிலும் எவ்வித காரணமுமின்றி ஐக்கிய தேசியக் கட்சி இவ்விதம் செய்தது. இம் மசோதா இரண்டாம் முறையாக விவாதத்துக்கெடுத்துக் கொள்ளப்படும் போது நான் இதை விளக்கிக் கூறுகின்றேன். சிங்களத்தை உத்தியோக மொழியாக்கும் போது தமிழ் மொழியின் உபயோகத்துக்கு உரிய மதிப்பு வழங்கப்பட வேண்டுமென்பதே எங்கள் கொள்கை. இது எவ்வாறு இயங்குகிறதென்பதை நீங்கள் காண்பீர்கள். இந்த ஏற்பாடுகூட ஐக்கிய தேசியக் கட்சியால் செய்யப்படவில்லை. அடிப்படை உரிமைகள் பற்றி ஒன்றுமே கூறப்படவில்லை. இத்தீர்மானத்தின் பேரிலேயேதான் ஐக்கிய தேசியக் கட்சி கடந்த பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டது. துரதிர்ஷ்டவச

மாக அவர்கள் நினைத்தது ஒன்று நடந்தது வேறொன்று. அக்கட்சியை அதிகாரத்திலமர்த்த இது பல வாக்காளர்களுக்கு ஒரு தூண்டுதலாக இருக்குமென்ற அவர்களின் எண்ணம் பலிக்கவில்லை. அவர்களின் நோக்கத்தை, சரியோ பிழையோ, மக்கள் ஏற்றுக் கொள்ளாதது ஒரு காரணம்; தேங்கிக் கிடந்த பல்வேறு அதிருப்திகள் மற்றொரு காரணம்.

இனி, மாஜி பிரதம மந்திரி தமது தேர்தற் பிரசாரத்தின் போது, தங்களைத் தேர்ந்தெடுத்தால் சிங்களம் மட்டும் மசோதாவைத்தான் தமது அரசாங்கம் முதலாவதாகச் சமர்ப்பிக்கும் என மக்களுக்கு வாக்குறுதியளித்தார். தேர்தல்கள் முடிந்துவிட்டன. எமது கொள்கைக் கிணங்க இப்பொழுது நாங்கள் இம் மசோதாவைத் தாமதமின்றி சமர்ப்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்நிலைமையை விளக்கிக் கூறுவதற்கு எனக்கோர் சந்தர்ப்பம் அளித்தமைக்கு உங்களுக்கும் இச்சபைக்கும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். நான் இதன் பலாபலன்களை அதிகரித்துக் கூற விரும்பாத போதிலும் அவற்றைக் குறைத்துக் கொள்ள வில்லை. எனவே நான் இச்சந்தர்ப்பத்தில் வரவேற்கும் உங்கள் எல்லோரினதும் ஒத்துழைப்புடன் தற் சமயம் என்னதான் கஷ்டங்கள் இருந்த போதிலும் இச் சூறுவளியைச் சமாளித்து, ஒன்றுபட்ட சுதந்திர இலங்கையை ஈற்றில் ஸ்தாபிக்க முடியுமென என்னல் உறுதி கூற முடியும். இதுவே, நம் எல்லோரினதும் விருப்பமுமாகும்.

# அரச கரும மொழிப்பிரச்சினை — இதன் வரலாறு

*(அரசகரும மொழி மசோதாவின் இரண்டாம் வாசிப்பின் மீது விவாதம் நடந்தபோது 1956 ம் ஆண்டு ஜூன் மாதம் 6 ந் திகதியன்று சனப்பிரதிநிதிகள் சபையில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு. இதன் முதலாம் வாசிப்பு முதல்நாள் இடம் பெற்றது.)*

---

சிங்கள மொழியை இலங்கையின் ஒரே அரசகரும மொழியாகச் சட்ட பூர்வமாக விதிப்பதற்கும், சில இடைக்கால ஏற்பாடுகளைச் செய்தற்கு வசதியளிப்பதற்குமாக இந்த மசோதாவின் இரண்டாம் வாசிப்பைப் பிரேரிக்கும் இவ்வேளையில், நான் ஏற்கெனவே இச்சபையில் வெளியிட்ட கருத்துக்களைப் பூரணமாக ஆனால் சுருக்கமாக விளக்க விரும்புகிறேன்.

இந்தப் பிரச்னையின் வரலாற்றையிட்டு—கடந்த சில வருடங்களில் அதாவது அரச கரும மொழியை ஆங்கிலத்திலிருந்து சுயபாஷைக்கு மாற்ற வேண்டுமென்று திரு. ஜே. ஆர். ஜயவர்தன அவர்கள் சட்ட சபையில் பிரேரணை கொண்டு வந்தது முதல் நடைபெற்ற சம்பவங்களையிட்டு இச்சபை நன்கு அறியுமென நினைக்கிறேன். அவரது பிரேரணை "சிங்களம்" என்ற சொல்லைக் குறிப்பிட்டது; இது பின்னர் "சிங்களமும் தமிழும்" என்று திருத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர் அதனைப் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு இச்சபையின் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழு தன் பரிசீலனையை முடித்த பின்னர் ஏழு வருட காலத்துள் இந்த மொழி மாற்றத்தைப் பூரணமாக்கலாம் என்று அறிக்கை சமர்ப்பித்தது—எனது விவாதத்தின் பொதுவான போக்குக்கு அத்தியாவசியமான சில அம்சங்களையே நான் இங்கு எடுத்துக்காட்டுகிறேன்.

முதலாவது பாராளுமன்றம் அமைக்கப்பட்ட பின்னர் அதில் மந்திரிகளான திரு. ஜே. ஆர். ஜயவர்தன, திரு. ஏ. இரத்நாயக்க போன்ற சில பிரமுகர்களை அங்கத்தவர்களாகக் கொண்டிருந்த அந்தத் தெரிவுக்குழுவின் அறிக்கை ஏழு வருடங்களுள் பூரண மொழிமாற்றத்தை ஏற்படுத்துவதற்கான விரிவான திட்டமொன்றை அமைக்குமாறு ஆலோசனை கூறியது.

புதிய அரசியலமைப்பின் கீழ் அதாவது சோல்பரி அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றம் நிறுவப்பட்டபோது, இந்த அறிக்கையை அப் போதைய மந்திரிசபை நிராகரிக்கவில்லை. உண்மையாக நடந்தது இதுதான். இவ்வாலோசனையை அமுல்நடத்துவதற்கான வழி வகைகளைக் காட்டுவதற்காக ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. இந்தக் கமிஷனுக்கு சேர் ஆர்தர் விஜயவர்த்தன தலைவராகச் செயலாற்றினர்.

இந்தக் கமிஷன் ஒரு தொகையான இடைக்கால அறிக்கைகளையும், ஒரு இறுதி அறிக்கையையும் வெளியிட்டது. ஆனல் இதில் ஒரு முக்கிய மான அம்சம் கவனிக்கப்பட வேண்டும். அதாவது மொழிமாற்றத்துக்கு ஏழு வருட காலத்தைத் தெரிவுக்குழுவின் அறிக்கை குறிப்பிட்டிருந்த தெனினும், அப்போதைய அரசாங்கம் குறிப்பிட்ட காலவரையறையினை நிர்ணயிக்கவில்லை. இந்த நிலைமை உண்மையில் அந்தக் கமிஷனுக்குப் பெரிய தடுமாற்றத்தை ஏற்படுத்தியது. எந்த இலக்குத் திகதியை அரசாங்கம் கருதிக்கொண்டிருக்கிறது என்பது பற்றிய அதன் கொள் கையை அறியாமல், தமது உண்மையான சிபார்சுகளை உருப்படுத்துவது கஷ்டமாயிருக்கிறதென்று சேர் ஆர்தர் விஜயவர்தன அவர்களே ஒரு தடவை கூறினரென நான் நம்புகிறேன். எனினும், இவ்விஷயம் சம்பந்த மான அறிக்கைகளை அவர்கள் சமர்ப்பித்தார்கள். அவற்றிலுள்ள சிபார்சு களைக் கடந்த அரசாங்கம் அதன் சொந்தக் கொள்கைகளுக்கமைவாக, முடிந்த வரையில், ஓரளவில் அமுல்நடாத்திற்று என நான் நம்புகிறேன்.

அதே நேரத்தில், கல்வி மந்திரி அவர்கள் சுயபாஷை மாற்றம் சம்பந்த மாகவும், அரசாங்கப் பரீட்சைகளை நடாத்துதல் பற்றியும், பாடசாலை களின் பல்வேறு வகுப்புகளின் மாற்றங்கள் பற்றியும் பல கொள்கை அறிக்கைகளை விடுத்ததுடன், கல்விப்பகுதியின் ஆலோசனைகளையும் காலத்துக்குக் காலம் வெளிப்படுத்தி வந்தார்; அத்துடன் ஆர்தர் விஜய வர்த்தன அவர்களின் அறிக்கையிலுள்ள சிபார்சுகளை நிர்வாக ரீதியில் அமுல்நடத்துவதற்கு திறைசேரியின் கீழ் அரச கரும மொழிகள் செயற் குழு அல்லது பகுதி என்ற ஒன்று நிறுவப்பட்டது. இதே வேளையில் பாடப்புத்தகங்களை மொழிபெயர்க்கும் மூலாதார நோக்கத்துக்காக கல்வி மந்திரியின் கண்காணிப்பின் கீழ் சுயபாஷைப் பகுதியும் கடமை மேற் கொண்டது.

1953ம் ஆண்டளவிலேயே எங்கள் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் "சிங்களமும் தமிழும்" என்ற பதங்களைக் குறிப்பிட்டிருந்த தெனினும், இதனைத் தெளிவுபடுத்தல் அத்தியாவசியமென்று அந்நேரத்தில் நாங்கள் உணர்ந்தோம். இவ்விஷயம் முழுவதையும் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஒரு செயற்குழுவை நியமிக்கவும் நாம் அப்போது தீர்மானித்தோம். அதன்படி செயற்குழுவொன்று நியமிக்கப் பட்டது. அச்செயற்குழு ஓர் அறிக்கையையும் வெளியிட்டது. அதனை

எங்கள் நிர்வாகச் செயற்குழு ஏற்றுக்கொண்டதுடன் தமிழ் மொழி உபயோகத்துக்கு உரிய அந்தஸ்து அளித்து சிங்களத்தை மட்டுமே இந் நாட்டின் அரசகரும மொழியாக்க வேண்டுமென்ற தீர்மானமொன்று எங்கள் கடந்த வருடாந்த மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. மொழி விஷயத்தில் எங்கள் கொள்கை என்ன என்பதைத் தெளிவாகக் கூற வேண்டிய அவசியத்தையிட்டு 1953 ம் ஆண்டு தொடக்கமே நாம் ஆலோசனை செய்து வந்திருக்கிறோம். இதற்குக் காரணம், நாம் அதுவரை பின்பற்றி வந்த அந்த வாக்கியத்தொடர் எமக்குத் திருப்தி அளிக்காததே யாகும். 1953 ம் ஆண்டு தொடக்கம் நாம் இதையிட்டு ஆலோசித்தோம்.

இவ்விஷயத்தைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமென்று ஐக்கிய தேசியக் கட்சியும் நினைத்ததாகத் தெரிந்தது. அதுவும் 1953 ம் ஆண்டில் என்பதுதான் நூதனமாகும். ஏனென்றால், அவர்களது வருடாந்த மகா நாட்டில், இந்நாட்டின் அரசகரும மொழிகளாக சிங்களத்துக்கும் தமிழுக்கும் ஒரே இயல்புடைய அந்தஸ்து—சம அந்தஸ்து—வழங்கப்பட வேண்டுமென்று செனற்றர் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் ஒரு பிரேரணை கொண்டு வந்தார். எனவே, நிலைமை போதியளவில் தெளிவாக இருக்க வில்லையென்பதும், அதனைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியமிருந்த தென்பதும் புலனாகும். அன்றேல், இத்தகைய ஒரு பிரேரணையைக் கால தாமதமாக 1953 ம் ஆண்டில் அல்லது 1954 ம் ஆண்டில்—அவர்களுடைய கூட்டங்களைப்பற்றிய குறிப்பு என்னிடமில்லாததால் அவை எப்போது நடந்ததென்பதை நிச்சயமாகக் கூற முடியாதிருக்கிறது—கொண்டு வர வேண்டிய அவசியம் செனற்றர் அஸீஸ் அவர்களுக்கு ஏன் ஏற்பட்ட தென்பது எனக்கு விளங்கவில்லை. இவ்விஷயத்தில் அவர்களது பழைய நிலைமை தெளிவானதாகவும், திட்டமானதாகவும் இருந்திருந்தால், இந்தப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு செனற்றர் அஸீஸ் அவர்களுக்கு ஏற்பட்ட அவசியந்தான் என்ன?

ஏற்கெனவே அவர்கள் இவ்விஷயத்தில் கடைப்பிடித்த ஒரு கொள் கையைத் தெளிவாக வரையறுக்க ஒரு அவசியம் இருந்ததென்பதை அவர் களே உணர்ந்தார்கள் என்பதையே நான் இவ்வேளையில் சம்பந்தப்படுத்திக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த விஷயம் 1954 ம் ஆண்டிலும் முடிவாகத் தீர்க்கப்படவில்லையென்று அவர்கள் எண்ணியதும் அதைத் தீர்ப்பது அவசியமென்று அவர்களுக்குத் தோன்றியதும் வெளிப்படையாகும். இதனைத் தெளிவு படுத்துவது அவசியமென்று நாங்களும் நினைத்தோம். நாங்கள் ஒரு வழியில் இதனைத் தெளிவுபடுத்த முனைந்தோம். அவர்கள் பிறிதொரு வழியில் தெளிவுபடுத்த முனைந்தார்கள். நடந்ததெல்லாம் இதுதான்.

இந்நாட்டின் அரசகரும மொழிகளாக சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து அளிப்பதே தனது கட்சியின் கொள்கையென்றும், இதனை அரசமைப்பு அரசவைக் கட்டளைகளில் சேர்த்துக்கொள்ளத் தான்

ஆயத்தமாயிருப்பதாகவும் 1954 ம் ஆண்டில் சேர் ஜோன் கொத்தலாவலே அவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு விஜயஞ் செய்தபோது கொக்குவில் எனுமிடத்தில் கூறியதாக அறிவிக்கப்பட்டது. சில மாதங்களுக்குப் பிறகு உண்மையில், தான் அவ்விதம் சொல்லவில்லையென்றே, அதே கருத்துப்படவோ சேர் ஜோன் கொத்தலாவலே அவர்கள் கூறியதை நாம் அறிவோம். யாழ்ப்பாணத்தில் அவர் கூறியதன் அறிக்கை புதினப் பத்திரிகைகளில் காணப்பட்டும் அது மறுக்கப்படவில்லை. எதிர்க்கட்சியிலுள்ள என் நண்பர்கள் சிலர் அந்தக் கூட்டத்தில் தாம் சமுகமளித்திருந்ததாகவும், அவர் அவ்விதம் கூறினுரென்றும் சொன்ஞர்களென நான் நம்புகிறேன்.

இதனுல் எல்லாம் ஒரே குழப்பமாயிற்று. அரசகரும மொழிகளின் சம அந்தஸ்து விஷயம் தென்பகுதியிலுள்ள மக்கள் முன்னர் பயங்கர விஸ்வரூபம் கொண்டிருப்பதைக் கண்டார்கள். சிங்கள மொழியின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் இது பெரிய கேட்டை விளைவிக்கும் என்றும் அவர்கள் நினைத்தார்கள்; சிங்கள மொழியை இது அழித்துவிடும் என்றும் அவர்கள் எண்ணினுர்கள். ஏற்கெனவே விளக்கிய காரணங்களை எண்ணி மக்களில் பெரும்பான்மையானேர், அதாவது சிங்கள மக்கள் அவ்விதமே கருதினுர்கள், மற்ற நாடுகளில் இலட்சக் கணக்கான மக்களால் தமிழ் பேசப்படுவதாலும், அம்மொழியில் மிகப் பரந்த இலக்கியம் இருப்பதாலும், தமிழ் பேசும் மக்களுக்கு அவர்களது இலக்கியத்தையும், கலாச்சாரத்தையும் பரப்ப சகல வசதிகளும் இருப்பதாலும், இந்நாட்டில் ஒரு சில இலட்சம் மக்களால் மட்டுமே பேசப்படும் சிங்களமொழி மீது தமிழ் மொழி ஆதிக்கஞ் செலுத்திவிடும் என்றும் அவர்கள் நினைத்தார்கள். பெரும்பான்மையான தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாத்திரமன்றி, சிங்கள மாகாணங்களிலும் (இந்தியர்களும் தமிழ் பேசும் மக்களாவர்) வாழ்வதும், எங்கள் பெரும் பட்டினங்களில், வியாபார முயற்சிகள் தமிழ் பேசும் மக்கள் வசம் ஓரளவில்—பெருமளவில்—இருப்பதும், சிங்கள மொழியின் உபயோகத்தைப் படிப்படியாகக் குறைத்து காலக்கிரமத்தில் அதனை அழித்துவிடக்கூடிய நிலைமையை ஏற்படுத்தலாம் என்று சிங்கள மக்கள் கருதினுர்கள்.

இது தவிர, அரசகரும மொழிகளாக இரண்டு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கும் ஆலோசனைக் கெதிராக வேறு பல நியாயங்கள் இருப்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையானேர் சிங்களவர்தான் என்ற உண்மை அவர்களுக்குப் புலப்பட்டது. சம அந்தஸ்து வழங்கப்பட்டால், தமிழ் மொழி அழிந்து போகக்கூடிய ஆபத்தை எதிர்நோக்காதென்றும், சிங்கள மொழிக்கு அவ்வித ஆபத்து ஏற்படக்கூடுமென்றும் கருதத்தக்க ஒருவித உணர்ச்சியை மேற்கூறிய நிலைமைகள் உண்டுபண்ணின. இந்தக் கருத்தைப் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடும். அல்லது ஏற்காமலிருக்கவும் கூடும். ஆனுல்

சிங்களவரில் பெரும்பான்மையானோர் இதனை மிகப் பாரதூரமானதாகக் கருதினார்களென்பது உண்மை. இவ்விஷயத்தில் அவர்கள் நியாயமாக நடந்து கொள்கிறார்களா என்று நீங்கள் கருதுவது பிறிதொரு பிரச்னையாகும்.

கடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஒரு சிறு சந்தர்ப்பத்தையேனும் ஏற்படுத்த வேண்டுமானால், இவ்விஷயம் சம்பந்தமாக தனது கொள்கையை முற்றாக மாற்ற வேண்டியது அவசியமென்று ஐக்கிய தேசியக் கட்சி நினைத்தது. கடந்த பொதுத் தேர்தலுக்குச் சற்று முன்பதாக, ஐக்கிய தேசியக் கட்சி களனியில் நடாத்திய மகாநாட்டில் சிங்களம் மாத்திரம் இந்நாட்டின் அரசகரும மொழியாக இருக்க வேண்டுமென்ற ஒரு வெறும் சாதாரண தீர்மானத்தை நிறைவேற்றியது. எதுவித தொடர்புமின்றி, பெரும்பான்மையினரான அல்லது சிறுபான்மையினரான பிரசைகளுக்குரிய அடிப்படை உரிமைகள் பற்றி எதுவுமே கூறாமல், எவ்வித பாதுகாப்புகளுமின்றி ஒரு வெறும் சாதாரண தீர்மானத்தை அக்கட்சியினர் நிறைவேற்றினர். இந்த அம்சத்தைப் பொறுத்தமட்டில், தமிழ் மொழியின் நியாயமான உபயோகம் தொடர்ந்து அமுல் நடத்தப்பட வேண்டுமென்பதையாவது நாங்கள் அங்கீகரித்தோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் இந்தக் கருத்தைத் தங்கள் கொள்கைப் பிரகடனத்திலும் திட்டத்திலும் வெளியிட்டிருந்தன.

**'துரதிர்ஷ்டவசமாக'** என்ற சொல்லை இங்கு குறிப்பிட நினைத்தேன். ஆனால் அதை நான் கூற விரும்பவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் தோல்வியுற்றது. அவர்கள் கடந்த தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார்கள். தனது கட்சி பதவியில் அமர்த்தப்பட்டால், சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக்க ஒரு மசோதாவைக் கொண்டுவருவதே தனது முதல் நடவடிக்கையாகும் என்று சேர் ஜோன் கொத்தலாவலை அவர்கள் தேர்தல் பிரச்சார காலம் முழுவதும் கூறிவந்தார். சில மாதங்களுக்கு முன்னரே தான், தனது முன்னாள் பிரதமர் மூலம் மொழிப் பிரச்னை சம்பந்தமாக தனது கொள்கையைத் திட்டவட்டமாக எடுத்துக் கூறிய ஐக்கிய தேசியக் கட்சி, முற்றிலும் மாறுபட்ட ஒரு போக்கைக் கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானது என்பதைக் குறிப்பிடுதற்காகவே நான் இதைக் கூறுகிறேன். எங்கள் கட்சியின் முக்கிய திட்டங்களிலொன்றான மொழி விஷயத்துக்காக நாங்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கையில்—இத்துடன் வேறு பல விஷயங்களுக்காகவும் நாம் தெரிவு செய்யப்பட்டோம்—இதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டியது எங்கள் கடமையென நாம் உணர்ந்தோம். ஒரு வட்ட மேசை மகாநாட்டைக் கூட்டினாலென்ன? பரிசீலனைகளை மேற்கொண்டாலென்ன? என்று பல கேள்விகளைக் கேட்கவிருப்பவர்களுக்கு இச்சட்டத்தைச் சீக்கிரத்தில் கொண்டுவர வேண்டிய அவசியமிருந்தது என்ற பதிலையே கூற விரும்புகிறேன். சிங்களம்

மாத்திரம் அரசகரும மொழியாகும் பிரச்னை நாம் மேலும் பரிசீலனை செய்ய முடியாத ஒரு நிலையைக் கடந்துவிட்டது.

சிந்தித்துப் பார்ப்பதற்கு இரண்டு அம்சங்கள் மட்டுமே எஞ்சியிருக்கின்றன. ஒரு மொழி அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்படும் பொழுது, அது சம்பந்தமான சகல வேலைகளையும் அடுத்த நாளிலேயே செய்துவிட முடியாது. மொழி மாற்றம் 24 மணித்தியாலங்களுள் நடைபெறலாமென்று சொன்னபொழுது அடுத்த நாளிலேயே வேலைகளை மாற்றிவிட முடியுமென்று எவரும் எதிர்பார்க்கவுமில்லை, கருதவுமில்லை. ஆங்கிலத்திலிருந்து மாறுவதற்கு ஒரு சட்டம் அவசியமில்லையென்ற காரணத்துக்காக 24 நிமிடங்கள் என்று நான் சொல்லவில்லையென்று மனம் வருந்துகிறேன். ஆங்கிலம் இந்நாட்டின் அரசகரும மொழியாக இருப்பதற்குச் சட்டம் அவசியமாக இருக்கவில்லையே !

எனவே, தேவையான மாற்றங்களைச் செய்து சிங்களத்தை அரசகரும மொழியாகப் பிரகடனம் செய்வது ஒரு கஷ்டமான கடமையாக இருக்கவில்லை. ஆனால் இரு சமூகங்களுக்கிடையில் சச்சரவேற்பட்டதன் மூலம் இந்தப் பிரச்னை சிக்கலடைந்ததால், இவ்விஷயத்தில் சட்டம் ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிற்று. இரண்டு அம்சங்களைப் பொறுத்தவரையில், ஓரளவு சிந்திக்கவேண்டியதவசியமாகும். ஒன்று, மொழி மாற்றத்துக்குத் தேவையான இடைக்காலம் ; சிறுபான்மை மக்களின் மொழி விஷயம் ஒருபுறமிருக்க மொழிமாற்றத்துக்கு அதாவது ஆங்கிலத்திலிருந்து மாறுவதற்கு வேண்டிய நேரம், காலம் என்ன ?—கௌரவ நீதி அமைச்சர் அவர்கள் உயர் நீதிமன்ற நீதிபதிகளை ஆலோசித்தபொழுது, சில விஷயங்களைச் செய்து, தொகுக்கரிப்பாளர்களையும் வழங்கினால் இந்த மாற்றத்தை நான்கு வருடங்களுள் செய்ய முடியுமென்று சொன்னார்கள். இந்த மாற்றத்தைச் செய்வதில் கஷ்டப்படக்கூடிய இடம் உயர் நீதிமன்றந்தான் என்று நாங்கள் கருதினோம். எனவே நான்கு வருடங்களுக்குப் பிந்திய ஒரு திகதியை நாம் நிர்ணயித்தோம். **அத்திகதி 1960 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந் திகதியாகும்.**

இயன்ற இடத்திலெல்லாம் இயன்றளவில் இந்த மொழிமாற்றத்தைச் செய்வது, எங்கள் கருத்தாகும். ஆனால் இதை அமுல் நடாத்தும்போது போதிய காரணங்களை முன்னிட்டு குறிப்பிட்ட காலத்தில் மொழி மாற்றத்தை நியாயமான அளவில் மேற்கொள்வது கஷ்டமென்று நாம் கண்டால், எங்களை எதிர் நோக்கியுள்ள சம்பவங்களுக்காக இம்மசோதாவில் வேண்டிய திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு இச்சபைக்கு முன்னரும் இந்நாட்டுக்கு முன்னரும் வர நாம் தயங்கமாட்டோமென்பதை இந்தக் கட்டத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இந்த விஷயத்தில் 'மீதியாதும்' பாரசீகரதும் எந்தச் சட்டத்தையும் நாம் நிலைநாட்டவில்லை. ஆனால் ஒரு இலக்கை வைக்க வேண்டியது அவசியமாக இருந்தது.

காலவரையறையின்றி பின்போடுதல் புத்திசாலித்தனமென்று முன்னைய அரசாங்கம் நினைத்ததுபோல் நாமும் இதனைக் கருதி வாளாவிருத்தல் திருப்தியளிக்காது. ஒரு வரம்பில்லாமல் ஒரு விஷயத்தை விட்டால்—20 வருடங்களுள், 50 வருடங்களுள் நடைபெற—பலன் தரத்தக்க மாற்றத்துக்கு அநுகூலம் ஏற்படமாட்டாது.

இன்னொரு அம்சத்தையும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. மற்ற விஷயங்களின் நிலைமை என்ன ? கல்வியைப் பொறுத்தமட்டில், ஒரு தொகையான தமிழ் பேசும் மக்களின் தாய் மொழி தமிழாக இருக்கிறது. அது மாத்திரமல்ல. எனது சகாக்களான பேர்கர் சமூகத்தினர் அநேக வருடங்களாக ஆங்கிலத்தைத் தமது தாய் மொழியாகப் பின்பற்றி வருகின்றனர். ஆங்கிலம் அவர்கள் தாய் மொழி. மலாய சமூகத்தினரும் ஆங்கில மொழியில் கல்வியூட்டப்படுகின்றனர். இதையிட்டு இன்னும் சொற்ப வேளையில் கூறுவேன். எனவே இது சம்பந்தமான நிலைமை இதுதான். இம்மசோதாவில் பல்வேறு விரிவான பிரிவுகளைச் சேர்ப்பது நடைமுறைக்குப் பொருந்தாததென்றும் புத்திசாலித்தனமற்றதென்றும் நாம் கண்டோம்.

உள்ளூராட்சிச் சபைகள் சம்பந்தமான சில பிரிவுகளையும், அரசாங்க ஊழியர் பற்றிய பிறிதொரு பிரிவையும், கடிதப் போக்குவரத்துச் சம்பந்தமான இன்னொரு பிரிவையும் இவைபோன்ற இன்னுஞ் சிலவற்றையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென நாம் நினைத்தோம். ஒவ்வொரு தனித்தனி விஷயத்தையும் விரிவாக ஆராயாமல், அவற்றை இம்மசோதாவில் சேர்த்துக்கொள்ளுதல் மிகமிகக் கஷ்டமாகும். உண்மையில், நாம் இங்கு சேர்த்துள்ள சில வாசகங்கள் சம்பந்தமாக, நான் மீண்டும் அளித்த வாக்குறுதியின் பேரில் அவற்றை நீக்கிவிடும்படி சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த நண்பர்கள் சிலரும், சில குறிப்பிட்ட கட்சி அங்கத்தவர்களும் எனக்கு அறிவித்தார்கள். இந்த மசோதா நிறைவேறியதும் இவ்விஷயத்துக்குப் பொறுப்பான மந்திரியாக நானே கடமையாற்றக் கருதுகிறேன். இந்த வாக்குறுதியை இப்பொழுது மீண்டும் அளிக்கிறேன். பொருள்கோடற் சட்டத்தில் பொருள்காண் முறைப் பிரகாரம் 'மந்திரி' என்ற பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது : இவ்விஷயம் எனக்கு வகுத்துக் கொடுக்கப்படலாம்.

இந்த மசோதா நிறைவேறியதும் நான் என்ன நடவடிக்கைகளை எடுப்பேன் என்று கூற விரும்புகிறேன். பூகம்பம் அல்லது சலப்பிரளயம் இடம்பெறப் போவதில்லை. கஷ்டத்தை ஏற்படுத்தாது இயன்றவிடங்களில் நாங்கள் மாற்றங்களைச் செய்வோம். அரசாங்க சேவை, அரசாங்க சேவையில் நிலை, அதில் தற்போதுள்ளவர்களின் நிலை, சிங்களம் தெரியாதவர்களின் நிலை முதலிய விஷயங்களைக் கவனிக்கும் முயற்சியில் நாம் ஈடுபடுவோம். பல வருடங்கள் சேவை செய்து இளைப்பாறும் தறுவாயிலுள்ளவர்கள் தொடர்ந்து சேவை செய்ய வேண்டுமென எதிர்பார்க்க முடியா

திருக்கலாம். அண்மையில் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்களும், வயதில் குறைந்தவர்களும் ஆனல் சிங்களச் சொல் தெரியாதிருப்பவர்களுமானவர்களின் விஷயத்தை நாம் ஆராய வேண்டும். இவர்கள் தொடர்ந்து சேவை செய்வதற்கு வேண்டிய குறைந்தபட்ச அறிவைப் பெற்ற பின்னர் கூட, புதிய நிபந்தனைகளுக்கு இவர்கள் எவ்வாறு பொருந்துவார்களென்பதை ஆராய ஓர் சந்தர்ப்பமளிக்கப்படும். தங்கள் சேவை நிபந்தனைகள் மாற்றப்பட்டுவிட்டன எனவும், விஷமத்தனமாகவன்றி உண்மையாகவே தொடர்ந்து சேவை செய்ய முடியாத நிலையில் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறத்தான் வேண்டுமெனவும் நினைப்பவர்களுக்கு தகுதியான சூழ்நிலைகளுக்கமைவாக வழங்கப்படக்கூடிய சலுகைகள் போன்ற இதர விஷயங்களும் ஆராயப்பட வேண்டியிருக்கின்றன. அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தமட்டில் இப்பிரச்னைகளையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது.

எதிர்கால நிலைமை என்ன? எதிர்காலப் பரீட்சைகளின் அரசாங்கப் பரீட்சைகளின் கதி என்ன? இந்த விஷயங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் போதனு மொழி எதுவாகும்? அரசாங்க சேவைப் பரீட்சைகளைப் பொறுத்தமட்டில், அவற்றைத் தற்போது சிங்களம் தவிர்ந்த பிறிதொரு மொழியில் நடாத்த அனுமதியளிப்பதும் அரிவரி தொடக்கம் பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு முடியும்வரை 10 வருடங்கள் போதுமென்ற அடிப்படையில் 1967 ம் ஆண்டை இப்பரீட்சைகளுக்கான இறுதிக்காலமாகக் கொள்வதுமான ஒரு ஏற்பாட்டை நாம் ஆராய்ந்தோம். இந்தப் பத்து வருடங்களுள் சிங்களத்தை இரண்டாம் மொழியாகவேனும் கற்கும் ஒரு மாணவன் அதில் போதிய அறிவு பெற்று அரசாங்க சேவையில் கஷ்டமெதுவுமின்றி வேலை மேற்கொள்ள முடியும்.

இப்போது உள்ளூர் ஆட்சிச் சபைகளின் விஷயத்துக்கு வருவோம். நகல் மசோதாவில் இதைப்பற்றிய வாசகமும் இருந்தது. உள்ளூர் ஆட்சிச் சபைகளின் பூரண நிலைமையையும் நாம் பரிசீலனை செய்ய வேண்டியிருந்தது. உள்ளூர் ஆட்சிச் சபைகளின் வேலைகள் இரண்டு பிரிவுகளுள் அடங்கும். ஒன்று நிகழ்த்தப்படும் பேச்சுக்களும் கேட்கப்படும் கேள்விகளும்; மற்றது கடிதம் எழுதுதல் போன்ற—சில உத்தியோக பூர்வமான கடமைகள். இந்த விஷயங்களை எல்லாம் நாம் பரிசீலனை செய்தோம். அரசமைப்பு அரசவைக் கட்டளைகளின் பிரகாரம் எமது நிலையான கட்டளைகளால் நிர்வகிக்கப்படும் பாராளுமன்றத்தின் விஷயத்தில் நாம் தலையிட விரும்பவில்லை.

இப்போது கல்வியை எடுத்துக் கொள்வோம். இம்மசோதா நிறைவேறியதும், போதனுமொழி சம்பந்தமான பிரச்சினையையிட்டு நாம் ஒரு விசாரணை நடாத்த வேண்டும். போதனு மொழிக்கும் அரச கரும மொழிக்குமிடையில் குறிப்பிட்ட நெருங்கிய தொடர்பில்லையென நான்

சுட்டிக் காட்டினேன். இவற்றுக்கிடையில் மறைமுகமான தொடர்பொன்று இருக்கிறது. நேரடித் தொடர்பு இல்லை. இப்பிரச்சினை முழுவதையும் நாம் ஆராய நேர்ந்தது. உத்தியோகத் தொழிலை விரும்புகிறவர்களுக்கு வசதியளிக்கு முகமாக, மாணவர்கள் சிங்களத்தில் போதிய அறிவு பெறின் தாய் மொழி போதனு மொழியாக இருக்கும் விஷயத்தில் நாம் தலையிடக் கருதவில்லை. அவர்கள் அதை அறிந்து கொள்ள வேண்டும். எனவே, போதனுமொழி பற்றிய முழுப் பிரச்னையையும் நாம் கௌரவ கல்வி மந்திரி அவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டியிருக்கிறது.

நாம் மேற்கொள்ளுவதற்கு இன்னும் இதுபோன்ற பல அம்சங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நினைத்து இம்மசோதாவில் சேர்க்க முயலுவதற்குப் பதிலாக, இந்தப் பிரச்னைகள் ஒவ்வொன்றும் எழும் அந்தந்த நேரங்களில் அவற்றை நுணுக்கமாக ஆராய்வதே சிறந்ததென்று நாம் உணர்ந்தோம். இது கஷ்டமானதென்று எனக்குத் தெரியும். இதை நான் பூரணமாக அறிவேன். முஸ்லிம்கள், சோனகர்கள், மலாயர்கள், பேர்கர் முதலானோரையும் தமிழ் அரசாங்க ஊழியர்களதும் முன்னுள் உயர்தர தமிழ் அரசாங்க ஊழியர்களதும் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதியாளர் குழுக்களையும் நான் கடந்த வாரம் நேர்முகமாகச் சந்தித்து இந்த நிலைமையை அவர்களுக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

பொதுவான ஒரு விடயத்தை ஏன் புகுத்தவில்லையென்று ஒரு பிரதியாளர் குழு என்னிடம் கேட்டது. தமிழ் மொழியின் உபயோகத்துக்கு உரிய அங்கீகாரம் வழங்கும் வகையில் இப்போது இது ஒரு நகலாகி விட்டதால், ஓர் ஆலோசனையைத் தெரிவிக்குமாறு நான் அக்குழுவைக் கேட்டேன். நீங்கள் கருதுவது என்னவென்பதை விளக்கமாகச் சொல்லாவிட்டால் அது இதனை திட்டமான தொன்றாக்க மாட்டாதென நான் கூறினேன். இது நீதிமன்றங்களால் அர்த்தஞ் செய்து கொள்ளக்கூடிய ஒரு சட்டச் சொல்லா? இந்தக் கஷ்டத்தை நான் அவர்களுக்குச் சுட்டிக் காட்டினேன். **இந்த மசோதாவுக்குப் பொறுப்பான மந்திரி என்ற முறையிலும், பிரதம மந்திரி என்ற முறையிலும், நான் குறிப்பிட்ட நடைமுறை மார்க்கமே பின்பற்றப்படவிருக்கும் மார்க்கமாகவும் இருக்கும் என்பதை இச்சபையில் உங்களுக்கு நிச்சயமாகக் கூறுகிறேன்.**

தயாளமான அல்லது நியாய உள்ளம் படைத்த யாவரையும் நான் கேட்டுக் கொள்வது இதுதான். இந்த மசோதா இதே விதமாகச் சமர்ப்பிக்கப்படுமிடத்து திருப்தியளிக்காமலும் இருக்கலாம். ஆனுல் இப்போதைய சந்தர்ப்பத்தில், நடைமுறையில் சாத்தியமான ஒரே மார்க்கம் இதுவாகத்தான் காணப்படுகிறதென்பதைக் காட்ட நான் முயன்றிருக்கிறேன். இதைச் செய்யும் போது, பிரதம மந்திரி என்ற முறையில், இச்சபைக்குச் சில வாக்குறுதிகளையும் நான் அளித்திருக்கிறேன். இன்னும் ஒரு மாத காலத்துள் இவ்விஷயங்களை நான் அமுல் நடாத்தும் கடமை

களே மேற்கொள்ள நேரிடும். அச்சந்தர்ப்பங்களில், சிறிது பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை மாத்திரமே நான் உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். இவ்விஷயங்கள் எப்படி நடக்கின்றன என்பதைத் தயவு செய்து பொறுத்துப் பாருங்கள். இவை எவ்வாறு நடக்கின்றன என் பதைப் பார்க்க விரும்பாத சிலரும் இருக்கலாம். அப்படி நினைப்பவர்களு க்கு உண்மையில் நான் சொல்லுவதற்கு அதிகமில்லை.

ஆனல் பல வருடங்களாக இந்நாட்டில் தோன்றியிராத மிக முக்கிய மான கஷ்டமான இந்தப் பிரச்சினையின் விஷயத்தில் ஏற்பட்டுள்ள இந் நெருக்கடியான வேளையில் இந்நாட்டின் பேரில் எங்களுக்கு ஒரு சந்தர்ப் பம் அளிக்குமாறு சிங்களவர், தமிழிர், ஏனையோர் ஆகிய சகல மக்களையும் நான் வேண்டிக் கொள்கிறேன். இங்கு கொண்டுவரப்பட்டுள்ள இம்மசோதா மீது நாங்கள் யுத்தம் தொடுப்போமென்றோ பூரண அழிவை ஏற்படுத்து வோமென்றோ நாம் நினையாதிருப்போமாக. இப்படியான எண்ணம் சகல ரையும் பொறுத்தமட்டில் புத்திசாலித்தனமான தென்றோ தேசாபிமானத் துக்கு உகந்ததென்றோ நான் ஒருபோதும் நினைக்கவில்லை.

இந்நாட்டின் அரச கருமமொழி சிங்களம் என்ற முக்கிய ஏற்பாட்டை வைத்துக் கொண்டு, அரசாங்க ஊழியர் விஷயத்தையும் மற்ற எல்லா விஷயங்களையும் இம்மசோதா நிறைவேற்றப்பட்ட பின் நாம் கவனிப்போம் என்ற பொதுவான வாக்குறுதியை நான் இங்கு அளிக்கிறேன். அரசகரும மொழித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தருணத்திலேயே, சிங்களத்தைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களுக்குச் சலுகைகளை அளித்து இந் நாட்டின் உடன் பிரஜைகளாக அவர்களுக்கு உரிய இடத்தை வழங்கும் போது எந்தப் பிரச்சினையையும் ஆராய்வது சுலபமாகும்.

எனது பேச்சை நான் நீடிக்க விரும்பவில்லை. நான் கூறியவற்றைப் பொறுமையாகக் கேட்டதற்காக நான் மீண்டும் இச்சபை அங்கத்தவர் களுக்கு நன்றி கூறி, இம்மசோதாவின் இரண்டாம் வாசிப்பை இப்போது பிரேரிக்கிறேன்.

# அரச கரும மொழி: அரசாங்கக் கொள்கை

*1956 ம் ஆண்டு யூன் மாதம் 14 ம் திகதி, அரச கரும மொழி மசோதா வின் இரண்டாம் வாசிப்பின் மீது விவாதம் முடிவடைவதன் முன்னர் சனப் பிரதிநிதிகள் சபையில் நிகழ்த்திய பிரசங்கம். இரண்டாவது வாசிப்பு 66 வாக்குகள் சார்பாகவும் 29 வாக்குகள் பாதகமாகவும் பெற்று நிறைவேற்றப்பட்டது. குழு ஆய்நிலையிலும் மூன்றாவது வாசிப்பும் அதே நாளில் நிறைவேறியது. மூன்றாவது வாசிப்பின்போது 65 வாக்குகள் சாத கமாகவும் 28 வாக்குகள் பாதகமாகவும் கிடைத்தன.*

---

கௌரவ அங்கத்தவர்கள், தீவிரமான கருத்து வேற்றுமைகளையும், உணர்ச்சிகளையும் தூண்டிவிடக் கூடியதுமான இப்பிரச்சினையை, கண்ணி யத்துடனும், நியாயமான அளவுக்கு சிநேக மனப்பான்மையுடனும் விவாதித்ததற்காக என்னுடைய மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரி வித்துக்கொள்ள இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்புகிறேன்.

இங்கு எடுத்துப் பேசப்பட்ட நியாயங்களுக்கு விரிவாக மறுமொழி அளிப்பதற்கு விரும்பவில்லை. நான் சொன்னதுபோல், கௌரவ அங்கத் தவர்கள் தங்களுக்குள்ளேயே, ஒருவருக்கொருவர் மறுமொழி அளித்து விட்டார்கள். ஆகவே விரிவாக நான் விடை கூறுவது அவசியமில்லை. விபரங்களைச் சுருக்கி ஒன்று சேர்த்து அரசாங்கம் இந்த விஷயத்தில் கொண்டிருக்கும் கருத்துக்களை விளக்கிக் கூறினால் போதுமானது என எண்ணுகிறேன்.

சம அந்தஸ்து என்று சொல்லப்படும் கருத்துக்குச் சார்பாக பற்பல கோணங்களிலிருந்தும் பலவித கருத்து வேற்றுமைகள் கொண்ட தர்க் கங்கள் எங்கள் முன்னர் வெளிவந்திருக்கின்றன. உணர்ச்சியாலும், மன வெழுச்சியாலும் உந்தப்பெற்ற கௌரவ வவுனியாத் தொகுதி அங்கத் தவரின் கருத்து; இதைவிட மேலான படியில் விவாதத்தை அடிப்படை யாகக் கொண்ட கௌரவ யாழ்ப்பாணத் தொகுதி அங்கத்தவரின் கருத்து; எனது கௌரவ நண்பர்களான சமஷ்டிக் கட்சி அங்கத்தவர்களின் மாறு பட்ட கருத்து, கடைசியாக வேறு மாறான கொள்கைகளிலும் பார்க்க சம அந்தஸ்துக் கொள்கை நாட்டின் மிகுந்த ஒற்றுமைக்கு வழிவகுக்கும் என்ற தங்கள் கருத்தைச் சரியெனக் காட்டப்பார்க்கும் எனது கௌரவ

நண்பர்களான லங்கா சமசமாஜக் கட்சி, பொது உடைமைக் கட்சி அங்கத்தவர்களின் கருத்து ஆகிய பல கருத்துக்கள் இங்கு வெளியிடப் பட்டிருக்கின்றன.

நான், வவுனியாத் தொகுதி அங்கத்தவர் கொண்டுள்ள கருத்தின் அடிப் படையில் இவ்விடயத்தைக் கையாள விரும்பவில்லை. இப்படிப்பட்ட பிரச்சினை மனவெழுச்சியை உண்டாக்கக்கூடியது என எனக்குத் தெளி வாக விளங்குகிறது.

யாழ்ப்பாணத் தொகுதிக் கௌரவ அங்கத்தவர் திரு. ஜி. ஜி. பொன்னம் பலம் அவர்கள் சம அந்தஸ்து என்ற சொல்லால் கருதப்படுவதிலும் பார்க்க குறைந்த ஒன்றினை அடிப்படையாகக் கொண்டே, சம அந்தஸ்துக் கான கருத்துக்களைப் பேசியிருக்கிறார். அவர் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவரென்றமுறையில் தமிழ் மக்களின் பிரச்சினையில் உள்ள முக்கிய அம்சமொன்றில் அக்கறை கொண்டிருத்தல் இயற்கையே. அந்த அம்சம் தமிழர்களின் தன்மதிப்பு என்று வைத்துக் கொள்ளுவோம். அவரின் கருத்தை நான் சரிவர விளங்கினேனானால் அவர் இச்சட்டம் நடை முறை யில் எவ்விதம் இயங்கும் என்பதைப் பற்றியே கூடிய அக்கறை கொண்ட வராய்த் தென்படுகிறார். உண்மையில் அவ்வெண்ணமும் தன்மதிப்பு என்ற விடயம்பற்றியது என்றே எனக்குத் தோன்றுகிறது.

தங்களது மொழியும், அதன் மூலமாகத் தாங்களும் இந்நாட்டு மக்களுக்குள் ஓர் கீழ்த்தரமான பகுதியினரென எண்ண, அவர்கள் விரும்பவில்லை. அது எனக்கு நன்றாக விளங்குகிறது. ஆனால் இதை, நான் சொல்ல விரும்புகிறேன். இதை நான் திருப்பித் திருப்பித்தான் சொல்லு கிறேன். ஏனெனில் இதை ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் சொல்லி இருப்பதாக ஞாபகம். இந்நாட்டுத் தமிழ் மக்களைக் கீழ்த்தரமான, அரை அடிமைகளாகவோ அல்லது அடிமைகளாகவோ ஆக்குவது நோக்கமில்லை என்று, எனது பலமெல்லாம் கூட்டி, எனது கௌரவ நண்பர்களுக்கு உறுதிப்படுத்த விரும்புகிறேன். அடிமைகள் என்று அவர்களை எண்ணுவ தென்பது இல்லை சபாநாயகரவர்களே!

சிங்கள மக்களில் பெருந்தொகையினரின் எண்ணங்களில் அப்படிப்பட்ட கீழ்த்தரமான விருப்பம் இருக்குமென நான் எண்ணவில்லை.

உண்மையில் தனிச் சிங்களத்தை அரசகரும மொழியாக்கும் விருப்பம், சிங்கள மக்கள் கீழ்நிலைக்கு கொண்டுவரப்பட்டுவிடுவார்கள், அவர்களது மொழியும் அவர்களும் பின்னுக்கு அமுக்கப்பட்டு இல்லாமலே ஒழிக்கப் பட்டுவிடும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டு விடுவார்கள் என்ற பயத்தினால் தான் உண்டாகியது என்பதை நம்புங்கள்.

நீங்கள் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பீர்கள். ஆனால் உண்மையில் கூடியதொகையான மக்களின் எண்ணங்களில் அப்படியான

கருத்து இருக்கின்றது என்பதையும் அப்படிப்பட்ட எண்ணம் பலர் நினைப்பதுபோல் பொய்த்தோற்றமானதல்ல என்பதையும் நீங்கள் நம்புங்கள். இக்கருத்தைத்தான், மனவெழுச்சிக்கு அடிமைப்படாமலும், நாடகபாணியிலல்லாமலும் எளிய முறையில், நல்லெண்ணத்தோடு கருத்து வேறுபாடு கொண்டுள்ளவர்களின் எண்ணங்களில் பதியவைக்க விரும்புகிறேன்.

ஆகவே நான் எனது கௌரவ நண்பர்களுக்குச் சொல்ல விரும்புவதென்னவென்றால் தமிழ்ச் சமூகத்தை ஓர் கீழ்தரமான நிலைக்குக் குறைக்கவேண்டுமென்ற எண்ணம், சரி இல்லாததாகும், அதாவது எனக்குத் தெரிந்த அளவுக்கு அப்படிப்பட்ட எண்ணம் சிங்கள மக்களில் பெருந்தொகையினருக்கு இல்லை. ஆகவே தன்மானம் என்ற விடயத்தை அந்தக் கண்ணுடன் இங்கு எழுப்பப்படுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

மற்றைய பிரச்சினை பகுத்தறிவு, நடைமுறை ஆகியவற்றின் அடிப்படையில் எழுவதாகும். அதாவது, இந்நடவடிக்கை எடுக்கப்படுவதால், உண்மையில், நடைமுறையில் இந்நாட்டுப் பிரசைகள் என்ற முறையில் அவர்கள் அனுபவிக்கும் உரிமைகளையும் சலுகைகளையும் அவர்களில் ஒரு சிலருக்கு மறுக்கப்படுகின்றதா என்பதாகும். அவைகள் அரசாங்க சேவை, பொதுச்சேவை, அல்லது அவர்களது வியாபார விடயங்களை நடத்துதல், அல்லது கல்விப் பிரச்சினை அல்லது உள்ளூர் ஆட்சிச் சபைகளின் கடமைகள் ஆகிய இன்னும் பல விடயங்களைப் பொறுத்ததாய் இருக்கலாம். இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதால், இந்நாட்டின் எந்த ஒரு பிரசையும் தனக்கு நியாயமான முறையில் உரித்தானது என்று கோரும் சலுகைகள் ஏதாவது அவர்களிடமிருந்து கவரப்படுகின்றதா?

இம்முக்கியமான வலிமை மிகுந்த கருத்தைப்பற்றி ஆராய்வதில் எங்கள் மூளைகளை உபயோகித்தல் வேண்டும்.

கேட்பதற்கு மகிழ்ச்சியை அளிப்பனவும், நான் எப்போதும் கேட்க விரும்புவனவுமான பேச்சுகளை பேசும் எனது கௌரவ நண்பனை, வெள்ளவத்தை-கல்கிசைத் தொகுதி கௌரவ அங்கத்தவர் திரு. கொல்வின் ஆர். டி சில்வா போன்ற கௌரவமிக்க எனது நண்பர்களுடன் நான் அந்த விடயத்தில் உடன்பாடு உள்ளவனாக இருக்கிறேன். ஆனால் அவர் என்ன சொல்லியிருக்கிறார்? இச்சட்டமூலம் இப்போது தயாரிக்கப்பட்டிருக்கும் நிலையில் உறுதியளிப்பதாய் இல்லை எனவும் மேலும் தனி நபர் ஒருவருடைய உறுதியைத் திருப்தியானது என்றோ முழுதும் திருப்தியானது என்றோ கொள்ள முடியாது என்று அவர் சொல்லுகிறார்.

எனக்கு அது தெரியும்; இரண்டாம் வாசிப்பைப் பிரேரித்துப் பேசும்போது அந்தக் குறைபாடு இம்மசோதாவில் இருக்கின்றது என்று சொல்லியிருக்கிறேன். அப்படி நான் சொல்லியிருக்கிறேன்; அதை நான் இப்போ

தும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், சம அந்தஸ்து கொடுக்க விரும்பாத வர்களுக்கு பரிகாரம் என்ன இருக்கிறது? மொழியின் உபயோகத்திற்கு தக்க மதிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற சொற்றொடரோ அது போன்ற வேறொரு விஷயத்தை பற்றிய சொற்றொடரோ பற்றுமலும் திருப்தியளிக்காமலும் இருக்கையில், இம்மசோதாவில் அப்படியான விபரங்களை விரிவாக இயற்றுவதென்பது இன்னும் கூடிய கஷ்டமான சந்தர்ப்பத்தை உண்டாக்குகின்றது என்று நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இம்மசோதாவில் அப்படியான விபரங்களை விரிவாக்கிச் சேர்க்கத் தொடங்கினுல் மாதங்கள், வருடங்கள் செல்லக்கூடிய வேலையாய் மாறுவது மட்டுமல்லாமல் இச்சபையில் ஒரு கிழமையல்ல மாதக்கணக்காக விவாதிப் பதற்குப் போதுமான வாக்கு வாதங்களுக்கு இடமளிப்பதாகும். அதனுல்தான் இம்மசோதா இந்தமாதிரியாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

தயாரிக்கப்பட்டிருக்கும் விதத்தில் இம்மசோதாவின் மூலம், செய்யப் கூடியன எவை, செய்ய முடியாதன எவை என்பது எனக்கு நல்லாக விளங்கும். விவாதிக்கவேண்டிய விடயங்களை விவாதித்தானபின், இம் மசோதாவின்கீழ் உண்டாக்கப்படும் பிரமாணங்கள் அல்லது நிர்வாக நடவடிக்கைகள் அல்லது வேறு விடயங்களை, உதாரணமாக, உள்ளூர் ஆட்சி போன்ற விஷயங்களைப் பாதிக்கும் சட்டங்கள் அல்லது கட்டளைச் சட்டங்களைத் திருத்தம் செய்வது போன்ற நடவடிக்கைகள் எடுப்பது மாத்திரமல்லாமல், தேவையாயின் இம்மசோதாவிற்கே திருத்தங்கள் செய்யவும் ஆயத்தமாய் இருக்கிறேன் என்று எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

இம்மசோதாவைச் சீக்கிரமாகவும் விரைவாகவும் இந்தவிதமாக சட்டமாக்க விரும்பியது இதனுல் தொடரும் மின்சாரம் பாய்ச்சப் பட்டிருப்பது போன்ற மன எழுச்சிகள், மனத்தாக்கங்கள், புரட்சிகள் கொண்ட சூழ்நிலையிலிருந்து இப்பிரச்சினையைப் புறம்பு பண்ணுவதற்கே யாகும்.

ஓர் அளவுக்கு, கொள்கை அளவிலாதல், சட்டரீதியாக இப்பிரச்சினை யைத் தீர்த்துவிட்டால் ஒழிய இதைச் சாதிக்க முடியாது. அப்படிச் செய்தபின், நான் முன்னர் இச்சபைக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன், அந்த வாக்கின் பிரகாரம், அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளுதல், சில சில இடங்களில், அதாவது இடங்களைக் குறித்துக் காட்டாமலும் அதன் மூலமாக நாட்டைப் பிரிக்காமலும், நிர்வாகம் நடக்கும் முறைகள், பொதுச் சேவைப் பிரச்சினை, கல்வி, உள்ளூர் ஆட்சிப் பிரச்சினை முதலிய வைகள் போன்ற விசயங்களில் எங்கள் கருத்தை விடலாம். இச்சட்டத் தினுல் அது இப்போது இருக்கும் நிலையில் நடைமுறையில் ஏற்படும் கஷ் டங்களை மாத்திரமல்லாமல் இதற்குப் புறம்பாக, அதாவது இத்திகதிக்கப் பாலும் நடைமுறையில் ஏற்படக்கூடும் கஷ்டங்கள் எல்லாவற்றையும் நாம் எல்லோரும் வட்டமேசை மகாநாடுகள் மூலமாகவோ வேறு எவ்வித

மாகவோ விவாதிக்கலாம். இம்மசோதா சட்டமானபின் அந்த விசயங்கள் எல்லாவற்றையும் அமைதியான சூழ்நிலையில் நாங்கள் விவாதிக்கலாம். அரசாங்கத்தின் சார்பாக அங்கத்தவர்களும், மந்திரிமாரும் சுட்டிக்காட்டியதுபோல், இம்மசோதாவின் முக்கிய கருத்தான சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கும் எண்ணத்தை அவமாக்காது, வேறு பகுதிகளில் உண்டாகும் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு தயாராய் இருக்கிறோம். மத்துறட்டைத் தொகுதி கௌரவ அங்கத்தவர் திரு. பண்டா தனது கட்சிச் சார்பிலும், சோனகர்கள், பேர்கர்கள், ஐரோப்பியர்கள், மலாயர்கள் போன்றவர்களின் பிரதிநிதிகள் அவரவர்கள் சார்பிலும் இவ்விவாதத்தில் பங்குபற்றி அப்படிக் கேட்டுக்கொண்டபோது அவர்களுக்கு அந்த உறுதியைக் கொடுத்திருக்கிறேன். அந்த உறுதிகளுக்குமேல் மீண்டும் மீண்டும் இந்த நேரத்தில் கூறமுடியாதென்பதைச் சபையோர் விளங்கிக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில், இந்த விடயத்தில் என்ன நடக்கும், அந்த விடயத்தில் என்ன நடக்கும் அல்லது பிறிதொரு விடயத்தில் என்ன நடக்கும் என்று விபரங்கள் கூறி விரிவான விவாதம் நடத்தவோ, விளக்கம் கொடுக்கவோ முடியாது. உண்மையில் நீங்களும், நான் அப்படிச் செய்யவேண்டுமென்று எதிர்பார்க்க மாட்டீர்கள். நடைமுறையில் அது முக்கியமான விடயம் என்று எண்ணுபவர்களுக்கு நான் திரும்பவும் திரும்பவும் அவ்வுறுதியைத் தருகிறேன்.

வெள்ளவத்தை-கல்கிசைத்தொகுதி கௌரவ அங்கத்தவரான எனது நண்பர் திரு. டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா, நாங்கள் சம அந்தஸ்து கேட்கும் தமிழ்ச் சமூகத்தின் எதிர்ப்புக்கு மாறாகப் போகப்படாது, அப்படிச் செய்வது புத்தியற்ற, இராச தந்திரமற்ற செய்கை, சம அந்தஸ்து கொடுப்பதே சரியான மார்க்கம் என்று சொன்னார்.

சிங்கள மக்களில் பெரும்பான்மையினர், சம அந்தஸ்து தங்களுக்குப் பெரும் நஷ்டத்தை விளைவிக்கக்கூடிய விஷயம் என்று சரியாகவோ பிழையாகவோ, மிகவும் கடுமையான எண்ணம் கொண்டிருக்கிறார்கள். இதை நான் மிகவும் குறைத்தே கூறுகிறேன். இதை அவர் அறிந்திருக்கிறாரா அல்லது இல்லையா? இந்த விசயத்தில் சிறுபான்மைச் சமூகத்தினரில் ஒரு சாராரை சாந்தப்படுத்தவேண்டுமென்றும், சிறுபான்மைச் சமூகத்தினரில் ஒரு பகுதியினருடைய, அல்லது சிறுபான்மைச் சமூகத்தினரில் பெரும்பான்மையான பகுதியினர் என்றுதானும் வைத்துக்கொள்ளுவோம்— அவர்களுடைய விருப்பத்துக்கு மாறாக நடப்பது புத்தியீனம் என்று சொல்லுகிறார். ஆனால் இப்பிரச்சினையில் பெரும்பான்மை மக்களின் பெரும்பகுதியினரைப் பொறுத்த அளவில் இராச தந்திரம் எங்கு கொண்டுபோய்விடும் என்று அவர் சொல்லவில்லை.

அவரும் நானும் இன்னும் நாங்கள் எல்லோரும் மனத்தில் விரும்பும் ஒற்றுமையை இந்நாட்டில் உள்ள சூழ்நிலையிலும் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த அளவிலும், சம அந்தஸ்து கொடுப்பதால், கூடுதலாக விருத்தி செய்யலாமென்று எதிரிலிருக்கும் எனது நண்பர்களான லங்கா சமசமாசக் கட்சி அங்கத்தவர்கள் தங்களை ஏமாற்றிக்கொள்ளத் தேவையில்லை. அப்படி சுலபமாய் அது கிட்டிவிடும் என்று எண்ணி ஏமாறத் தேவையில்லை. எனது கௌரவ நண்பர்களான சமஷ்டிக் கட்சி அங்கத்தவர்கள், சம அந்தஸ்து கொடுப்பதால் தங்களது பிரச்சினை தீர்ந்துவிட மாட்டாது என்றும் தங்களது விருப்பம் நிறைவேறிவிடாதென்றும் விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் மேலும், எனது கௌரவ நண்பரான வெள்ளவத்தை-கல்கிசை தொகுதிப் பிரதிநிதி சம அந்தஸ்துக் கொடுத்து உடம்பு இரத்தம் ஒழுகும் துண்டங்களாக பிரிக்கப்படுவதைத் தவிர்க்கப்பார்க்கையில், சமஷ்டிக்கொள்கையின் அடிப்படையில் அரசாங்க ரீதியில் பிரிவைத் தவிர சம அந்தஸ்து தங்களுக்கு ஒருவித அநுகூலமும் செய்யாதென்று விளக்கமாய் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கொள்கையை ல. ச. ச. க. அங்கத்தவர்களே நியாயமாகவும் வன்மையாகவும் கண்டிக்கிறார்கள். நவ லங்கா சமசமாசக் கட்சியினர் என்று பொதுவாக வழங்கப்படும் கட்சிக்கு எதிர்ப்புறத்தில் வீற்றிருக்கும் எனது கௌரவ நண்பர்களினது கருத்துப்படியும் அவர்களது கண்ணோக்குப் படியும் மொழியில் சம அந்தஸ்து இப்போது கொடுபடுவதையும் அப்படிக் கொடுப்பதால் ஏற்படும் பலாபலன்களையும் அவர்கள் தவிர்க்க விரும்புகிறார்கள். சம அந்தஸ்து சமஷ்டிவாதிகளைத் திருப்திப்படுத்தாது. அப்படிக் கொடுப்பதால் அவர்களுடைய சமஷ்டிக் கோரிக்கைகளைப் பலப் படுத்துவதாகவே முடியும். சம அந்தஸ்து அவர்களது பலத்தைக் குறைக்காது, எங்களில் பலர் தீமையானவை என்று எண்ணும் விளைவுகளை உண்டாக்கும் அபாயத்தைக் கூட்டுவதற்கே உதவி செய்யும். சிங்களவர்களில் பெரும்பான்மையோர் மாத்திரமல்லாமல் தமிழ்ச் சமூகத்தினரிலும் பெரும்பாலார் சமஷ்டிக் கொள்கையை வெறுக்கிறார்கள். சம அந்தஸ்து கொடுத்து எவ்விதம் ஒற்றுமைப் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறீர்கள். அதற்கு மாறாக ஆறாத புண் ஒன்றாகவே அப்பிரச்சினை தொடர்ந்து இருந்து வரும். எனது கௌரவ நண்பர்கள் சம அந்தஸ்து என்பதைக் கொடுத்து உண்டாக்க விரும்பும் ஒற்றுமைக்கு, சிங்கள மக்களிடையே சம அந்தஸ்து தங்களுக்குக் கூடிய கெடுதல்களை எந்த வகையிலும் விளைவிக்கும் என்ற எண்ணம், எப்போதும் பங்கம் விளைவித்துக்கொண்டே இருக்கும். இக்கருத்துடன் எனது கௌரவ நண்பர்கள் உடன்பாடு உடையவர்களாய் இருப்பார்கள் என்று நான் எண்ணவில்லை. ஆனாலும் என்னுடைய இக்கருத்து எனது கௌரவ நண்பர் வெள்ளவத்தை-கல்கிசைத் தொகுதி அங்கத்தவர் மிகவும் சொல்வன்மையுடன் எடுத்து உரைத்த கருத்திலும் பார்க்க கூடுதலான வலிமை உடையதாய் இல்லாவிட்டாலும் அதற்குச் சரிசமனான வலிமை யோடாதல் எடுத்து

விவாதிக்கப்படக்கூடிய கருத்தென்று நாண் எண்ணுகிறேன். என்னுடைய நோக்கத்திற்கு இப்பிரச்சினை இவ்விதமாகத்தான் காட்சியளிக்கிறது. அரசாங்கக் கட்சியின் எண்ணத்தில் இப்பிரச்சினையை இராச தந்திரத்துடன் திர்ப்பது, நான் முன் சொன்ன மற்றைய விடயங்களை, ஒரு தனி நபரின் காலவரையறையற்ற உறுதியில் நம்பிக்கை வைக்காது பின்னர் ஆராய்வதற்காக ஒத்திப் போட்டுவிட்டு, இச்சட்டத்தை, கூடிய சீக்கிரத்தில் இந்த நிலையில் கொண்டு வருவதே சரியென தோன்றியது இந்த விடயங்கள் உண்மையில் ஒரு நேரத்தில் ஆராயப்பட்டு, பரிசீலனை செய்யப்படவேண்டியவையாகும். எதிர்பார்த்த விளைவுகள் கைகூடுமா என்பதை நீங்களே காண்பீர்கள். நீங்கள் கூடிய சீக்கிரத்தில் காணத்தானே வேண்டும்.

நாட்டில் இப்பிரச்சினையின் காரணமாகச் சென்ற வாரத்தில் துர்ப்பாக்கியவசமாய் நடந்த சம்பவங்களைப்பற்றி வேறெவரிலும் பார்க்க கூடுதலான மனவருத்தம் உடையவனாக இருக்கிறேன். அவ்விடயங்களெல்லாம் குறைந்துகொண்டு வருகின்றன என்று நான் நம்புகிறேன். இப்பிரச்சினையில் அக்கறை கொண்டுள்ள சிறுபான்மையினர், நான் சொன்ன விடயங்கள் முழுமையாக விவாதிக்கப்பட்டு அவை கைகூடுவதைக் காணும் போது, தாங்கள் ஆதாரமற்ற பயத்துக்கு ஆளாகியிருந்தார்கள் என்பதை உணர்ந்து ஒரு தேசத்து மக்களாகக் கட்டாயம் விளங்குவார்கள்.

# சிங்களமும் தமிழும் உபயோகித்தல்

*1957 ம் ஆண்டு ஜுன் மாதம் 13 ம் திகதி மூன்றுவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தை மகா தேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலக்க திறந்து வைத்து நிகழ்த்திய சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிகூறுமுகமாக, 1957 ம் ஆண்டு ஜுன் 19 ம் திகதி சனப் பிரதிநிதிகள் சபையில் பிரதம மந்திரி கூறியதாவது :—*

*மொழிப் பிரச்சினையைப்பற்றி இனிக் குறிப்பிட விரும்புகிறேன். மொழிப் பிரச்சினையைப் பற்றிய நிலைமை என்ன? கொக்குவிலிலே சேர் ஜோன் கொத்தலாவலை சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படுமெனக் கூறியதுதான், சிங்களரிடையே பெரும்பரபரப்பை உண்டுபண்ணுவதற்குக் காரணமாயிருந்தது. சிங்கள மக்கள்—இவர்களுட் பெரும்பாலாரின் கருத்து எனக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்—என்ன கருதினார்கள்? சிறந்த இலக்கியம், சஞ்சிகைகள், நூல்கள், சினிமாப் படங்கள் ஆகிய சகல சாதனங்களையும் கொண்டதும், இந்நாட்டில் குறித்த ஒரு பகுதியினரால் மட்டுமன்றி தென்னிந்தியாவிலும் இதர நாடுகளிலும் எட்டுக்கோடி மக்களால் உபயோகிக்கப்படுவதுமான தமிழ் மொழி, தனது பாரிய சக்தியினால் காலக்கிரமத்தில் சிங்கள மொழியை நசுக்கி அழித்துவிடக்கூடுமெனச் சிங்கள மக்கள் அஞ்சினார்கள். மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் தங்கள் கருமங்களைத் தமிழ் மொழியிலே நடத்தி வருகிறார்கள். சிங்கள மொழி வழக்கொழிந்து அழிந்துவிடக்கூடுமென சிங்கள மக்கள் கருதினார்கள்.*

*இது மிகைபடக்கூறியதாகவிருக்கலாம். எனினும் அவ்வாறு சிங்கள மக்கள் அஞ்சுவதற்குப் போதிய நியாயமிருக்கிறதென நான் உணர்ந்தேன்; இப்போதும் உணர்கிறேன். ஆகவே சம அந்தஸ்து வழங்கக்கூடாதென சிங்கள மக்கள் கூறினார்கள்.*

*இவ்வாறு சம அந்தஸ்து வழங்குவதால் சிங்கள மொழி அழிந்துவிடக்கூடும். அவ்வாறு அழிந்துவிடாது பாதுகாக்கப்படவேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். அவ்வாறு அவர்கள் கருதுவது நீதி நியாயமானதென நினைத்தார்கள். ஆனால் அவர்களுள் எவராவது இவ்வாறு சிங்கள மொழியைப் பாதுகாப்பதைத் தவிர வேறெதுவும் செய்ய விரும்பவில்லை. எங்கள் தமிழ்ச் சகோதரர்களுக்கோ அவர்களுடைய மொழிக்கோ அவர்களுடைய பண்பாட்டுக்கோ சிங்கள மக்கள் எவ்வித தீங்காவது அநீதியாவது செய்ய*

விரும்பவில்லை. வெளிப்படையாகச் சொல்லாதிருந்தாலும் ஒருசில சிங்களர் தங்கள் மனதில் வேறு கருத்து—எதிர்க்கட்சியிலுள்ள கௌரவ அங்கத்தவர்கள் அஞ்சுவதுபோல, அதாவது, தமிழ் மொழியை நசுக்கி ஒழித்துவிடும் கருத்து—கொண்டிருந்திருக்கலாம். அதைப்பற்றி எனக்குத் தெரியாது. அத்தகையோர் இருந்தால், இப்பொழுது இருக்கிறார்களானால், அவர்களின் தொகை மிகமிகச் சொற்பம் என்பதை எதிர்க்கட்சி அங்கத்தவர்களுக்கு உறுதியாகக் கூற விரும்புகிறேன். எனக்கு என்னுடைய மக்களைப்பற்றி நன்கு தெரியுமாதலால், நான் அவ்வாறு உத்தரவாதமளிக்க முடியும்.

இனி, தப்ப முடியாத இந்த சிக்கலான நிலையில் எங்கள் கட்சி என்ன தீர்மானித்தது? நான் முன்னர் குறிப்பிட்ட முறையிலேயே அதுவும் சிந்தனையைச் செலுத்தியது. இந்நாட்டின் அரசகரும மொழியாகச் சிங்களத்தை உபயோகிக்கவும், தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்கவும் வேண்டுமென எனது கட்சி தீர்மானித்தது. இந்நாட்டு மக்களிற் பெரும்பாலார் இந்தக் கொள்கையை அங்கீகரிக்கின்றனர் என்பதைக் கடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டின. இதனை எவ்வாறு நாங்கள் நிறைவேற்றுவது? என்று உங்களைக் கேட்கிறேன். சிங்களத்தை அரசகரும மொழியாக்க நாங்கள் முற்பட்டோம். அதுதான் எங்களுடைய முதல் வாக்குறுதி.

அதைச் செய்து முடிந்த பின், சிங்களம் மாத்திரம் என்ற மசோதாவை நான் சமர்ப்பிக்கும்போதே, எங்கள் வாக்குறுதியின் பிற்பகுதி குப்பைக் கூடைக்குள் எறிந்துவிடத்தக்கதொன்றல்ல என்பதையும், எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றியே தீருவோம் என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டினேன். அப்படியானால் அந்த நேரத்திலேயே அவ்வாக்குறுதியின் பிற்பகுதியை நிறைவேற்றி வைக்கவில்லையே என நீங்கள் கேட்கக் கூடும். இதற்கு அநேக காரணங்கள் உண்டு என்பதை கௌரவ அங்கத்தவர்கள் ஒத்துக்கொள்வார்களென நினைக்கிறேன். முதலாவதாக, தமிழுக்கு உரிய அந்தஸ்து எந்த விஷயங்களில் கொடுக்கப்படவேண்டுமென்பதை முதலிலே தெரிந்துகொள்ள விரும்பினேன். இரண்டாவதாக, சிங்கள மக்கள் உணர்ச்சிவசப்பட்டு நிற்கிற தருணத்தில், தமிழுக்கு இவ்வித அந்தஸ்து கொடுக்க முயல்வது புத்திசாலித்தனமாக இருக்க மாட்டாது. அவ்வாறு அந்தஸ்து தமிழ் மொழிக்கு அளிப்பதற்கு அத்தருணம் உகந்ததல்ல எனக் கருதினேன். ஆனால் அதை நாங்கள் முற்றாக மறந்துவிடவுமில்லை. ஒரு வருடமாக உறங்கிவிட்டு, பின்புதான் இதைப்பற்றிச் சிந்தித்தோம் என்று சொல்லிவிட முடியாது. சிங்களம் மாத்திரம் சட்டத்தைக்கூட அமுல் நடத்துவதில், நிர்வாக முறையில் என்ன என்ன முறைகள் கையாளப் பட்டன என்பதை உங்கட்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

உதாரணமாகக் கல்வியை எடுத்துக் கொள்வோம். தமிழ்ப் பிள்ளைகள் தங்கள் தாய் மொழி மூலம் கல்வி கற்க உரிமையுண்டு என்பதைச் சகலரும் சிங்களத் தீவிரவாதிகள்கூட, ஒத்துக்கொள்வார்கள். அவர்கள் சட்ட முறையான அரசகரும மொழியைப்பற்றி சிரத்தை கொள்ளவில்லை. மெத்தச்சரி, இனி பல்கலைக்கழகத்தில் உள்ள கல்வியைப் பற்றிய கேள்வி எழுகின்றது. சிங்களத்தில் மாத்திரமே கல்வி ஊட்டப்படவேண்டுமென ஒரு சிலர் கருதினர். எங்களிடமுள்ள ஒரேயொரு பல்கலைக்கழகத்தில், தாய்மொழிமூலம் கல்வியூட்டப்பெற்ற ஒரு தமிழ்ப்பிள்ளை, கல்வியின் உயர்ந்த படித்துறையிலும் அம்மொழி மூலமே கல்வி கற்க வசதியளிக்கப் பட வேண்டுமென்பதில் எவ்வித பிரச்சினைக்கும் இடமில்லையென யான் சுட்டிக் காட்டினேன். எனவே ஆங்கிலமும் கல்வியூட்டிவந்த கலைப் பீடம் சிங்கள மொழிமூலம் கல்வியூட்டுமொறு மாற்றியமைக்கப்படும் பொழுது தமிழ் மொழிமூலம் கல்வி யூட்ட வசதியளிக்க வேண்டும்.

அடுத்தபடியாக அரசாங்க சேவையை எடுத்துக் கொள்வோம். சிங்களம் மாத்திரம் சட்டம் அமுலுக்குவர முன்னர் நியமனம் பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக அரசாங்க சேவையில் நாங்கள் என்ன செய்திருக்கிறோம்? அவர்கள் ஆங்கிலம்மூலம் கருமமாற்றுதற்கேற்ற வேறு பட்ட நிபந்தனைகளுக்கமைய நியமிக்கப் பெற்றவர்கள். எனவே அவர்களை இப்பொழுது சிங்களம்மூலம் கருமமாற்றும்படி கேட்பதென்பது, அவர் கள் சேவைக்கு நியமிக்கப்பட்டபொழுது இருந்த நிபந்தனைகளுக்கு வேறு பட்ட ஓரளவு முக்கிய மாற்றமாகும். அரசாங்க சேவையிலே அத்தகைய மாற்றம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இடையூறு செய்வதாக இருக் கக் கூடாதென்பதை நாங்கள் அறிவோம். அரசாங்க சேவையில் அவர் கள் நியமனம் பெற்றபின் அவர்கள் எதிர்பாராத மாற்றம் ஏற்படுமிடத்து, அவர்கள் இதனால் பாதிக்கப்படாது தொடர்ந்து சேவை புரிய அவர்களுக் குச் சுதந்திரமுண்டு.

அவ்வாறிருந்த போதிலும், அவர்கள் அரசகரும மொழியில் ஓரளவு திறமை காட்டினால் அவர்களுக்கு நன்கொடை வழங்க முன்வந்துள் ளோம். அவர்களுட் பெரும்பாலார் இந்த நன்கொடைச் சலுகையைப் பெருந்தொகையினர் பயன் படுத்திக் கொண்டனர் என நம்புகிறேன். சில தமிழர்—தமிழர் மாத்திரமல்ல தங்கள் தாய் மொழியில் சிறந்த அறிவில் லாத சிங்களவர் கூட—அரசகரும மொழியை ஓரளவு கற்றுக் கொள்ளு வதற்கு ஏற்படுத்தப்பட்ட வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு வருகின் றனர். அது நீதிநியாயமானதே.

சிங்களம் மாத்திரம் மசோதாவுக்குப் பின்னர் அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்துள்ள உத்தியோகத்தர் விஷயத்தில் நாங்கள் ஏற் கெனவே கையாண்டு வரும் முறை இதுதான். அவர்கள் தங்கள் தாய் மொழிமூலம் தகுதிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுகின்றனர்.



3—

நான் விவரித்துள்ள கருமங்கள் இப்பொழுது செய்யப்படுகின்றன. ஆனுல் அவர்களுக்கு நிரந்தரமான நியமனம் கொடுப்பதற்கு முன்னர் அவர்கள் திறமை காட்டவேண்டும். அரசகரும மொழி அறிவு பெற்றிருக்க வேண்டும். அதில் எவ்வித பிழையுமிருப்பதாக நான் கருதவில்லை.

இந்தப் பிரச்சினையை ஓரளவு நீதிநியாயமான முறையில் தீர்த்துக் கொள்ளலாம் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கையுண்டு. சிங்களம் இரண்டாவது மொழியாகத் தமிழ்ப் பாடசாலைகளில் படிப்பிக்கப்படும். சிங்களரும் தமிழ் படிக்கட்டும். ஏன் முடியாது? அப்படிச் செய்தால் தகுதிகாண் காலம் என இப்போதுள்ள நிபந்தனையை நீக்கிவிடச் சாத்தியமாகும். அவர்கள் தகுதிப் பரீட்சைக்குத் தங்கள் தாய் மொழியிலே தோற்றக் கூடியதாக விருந்தபோதிலும், அவர்கள் அரசகரும மொழியைக் கற்று அம் மொழியிலும் இரண்டொரு வினுப்பத்திரங்களுக்கு விடையெழுதலாம்.

இனி அடுத்த பிரச்சினை கடிதத் தொடர்பு பற்றியதாகும். தமிழிலே படித்த ஒரு தமிழ்ப்பிள்ளை தனக்குத் தெரிந்த மொழியைத்தான் உபயோகிக்கமுடியும். அவன் அப்படித்தான் இப்பொழுது செய்து வருகிருன். அம்மொழியிலேயே மறுமொழிகளையும் பெற்று வருகிருன். உள்ளூர் ஆட்சித் தாபனங்கள் சம்பந்தமாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தாபனங்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிஞல் அத்தாபனங்கள் தங்கள் தமிழ் மொழியிலே கருமமாற்றலாம். ஆனுல் அரசாங்கத் தொடர்புள்ள தாபனங்களுக்கும் மத்திய அரசாங்கத்துக்குமிடையில் நடைபெறும் கடிதப் போக்குவரவு எந்த மொழியில் நடைபெற வேண்டுமென்பது ஆலோசனை செய்யப்பட வேண்டிய விஷயமாகும். இவ்வாறு நாங்கள் கூறியுள்ளோம். எப்படியிருந்தாலும் அந்த விபரங்கள் பின்னர் ஆலோசனை செய்யப்பட வேண்டியவையாகும். இந்நாட்டிலுள்ள தமிழ் பிரசைகள் தங்களுக்கு மதிப்புக் குறைவு ஏற்படுகிறது அல்லது தங்களுக்கு அநீதி வழங்கப்படுகிறது அல்லது பாரபக்ஷம் காட்டப்படுகின்றது என்ற உணர்ச்சி ஏற்படாமல் தங்கள் தாய் மொழியை உபயோகிப்பதற்குப் பாதுகாப்பளிக்கக்கூடிய முறையில், தமிழ் மொழி உபயோகம்பற்றி விரிவாக ஆலோசனை செய்யப்படவேண்டும் எனக் கருதுகிறேன்.

மேலும், சிங்கள மக்களுட் பெரும்பாலார் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலேதான் இவ்விஷயங்களை நான் சமர்ப்பிக்க வேண்டும்.

**இந்த நாட்டினைக் குழப்பத்துக்குள் தள்ளிவிட முயலாதிருக்குமாறு சமஷ்டிக் கட்சி அங்கத்தவர்களாகிய என் நண்பர்களை வேண்டிக் கொள்கிறேன். சமஷ்டி அரசாங்க விஷயத்தில், அவர்களுடைய உண்மையான அடிப்படைக் கோரிக்கை எப்பொழுதுமே இந்த சமஷ்டிக் கொள்கையைத் தன்னகத்தே கொண்டதாக இருந்து வருகிறது என்பதை நான் இங்கேயே இப்பொழுதே குறிப்பிட விரும்புகிறேன். இந்நாட்டின் எப்பகுதி**

யினரும், தமிழர் சமூகத்திலே பெரும்பகுதியினர்கூட, சமஷ்டி அரசாங்கத்தை ஆதரிக்கவில்லை. சமஷ்டிக் கொள்கைக்குத் தூபமிடவே இந்த மொழிப்பிரச்சினையை ஒரு கருவியாக அவர்கள் கையாண்டு வருகிருர்கள்.

கௌரவ அங்கத்தவர்கள் சர்வஜன வாக்குப் பெறுவதைப்பற்றி குறிப்பிட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வஜன வாக்கு என்பதன் அர்த்தமென்ன? நாடு முழுவதிலுமுள்ள மக்கள் வாக்கினையா அல்லது இந்த நாட்டிலுள்ள சகல மக்களின் வாக்கினையா? அவர்கள் மனத்திலே உள்ள கருத்து அதுதானு? அப்படியல்லவென்பது தெளிவு. தமிழ் மக்களின் வாக்கினை மாத்திரம் எடுக்கும்படி அவர்கள் கோருகின்றுர்கள். அப்படியானுல் ஐக்கிய இராச்சியத்திலுள்ள ஸ்கொத்லாந்து மக்கள் அவர்களுக்கு ஸ்கொத்திலாந்தை பிரிவினை செய்துவிடுவதை விரும்புகிறுர்கள் என்று பார்க்க ஸ்கொத்திலாந்து மக்களின் வாக்கினைப் பெறவேண்டும். இதற்காக அவர்கள் கிளர்ச்சி செய்தவண்ணம் இருக்கின்றனர். வேல்ஸ் மக்களின் நிலைமையும் அப்படியே. சிறுபான்மையோரின் கோரிக்கைகள் என்ன என்பதை அறிய அவர்களுடைய வாக்கினைப் பெறவேண்டும். சர்வஜன வாக்குரிமை என்ற சொற்றொடருக்கு இவ்வாறு பொருள்கொண்டு காரியம் பார்க்க முடியுமா?

# தமிழ்மொழிக்குத் தகுந்த இடம்

*[ஜனப்பிரதிநிதிகள் சபையில் தமிழ் மொழி (விசேஷ ஏற்பாடுகள்) மசோதாவை இரண்டாவது தடவையாகப் பிரேரித்துப் பேசுகையில் செய்யப்பட்ட சொற்பொழிவு. இது 1958 ஆகஸ்ட் 5 ந் தேதி செய்யப் பட்டது. இம்மசோதாவின் முதலாவது வாசிப்பு 1958 ஜூலை 17 ந் தேதி நடைபெற்றது. இரண்டாவது வாசிப்புக்குச் சாதகமாக 44 பேரும் எதிராக 3 பேரும் வாக்களித்தனர். இரண்டாவது வாசிப்பு நடைபெற்ற அதே தினத்திலேயே மூன்றுவது வாசிப்பும் வாக்களிப்பில் பிரிவினையின்றி நிறைவேற்றப்பட்டது.]*

---

இந்த மசோதாவின் சரித்திரத்தை இந்தச் சபை நன்கறியும். அதை விரிவாக நான் இங்கு எடுத்துக் கூறுவது அவசியமில்லை. பிரச்சினையை நாங்கள் யாவரும் அறிவோம். இது ஒரு கடினமான பிரச்சினை. அதற்கு நாம் ஒரு தீர்வும் காணவேண்டியிருக்கிறது. இரண்டு தரப்பிலும் தீவிரவாதிகள் இருக்கிறுர்கள். அவர்களின் தீவிர வாதத்தால் ஒருபோதும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. சிங்கள தீவிரவாதத்தாலும் இதனைத் தீர்க்க முடியாது. தமிழ் தீவிரவாதத்தாலும் இதனைத் தீர்க்க முடியாது. நாம் ஒரு மத்திய வழியைக் காணல் வேண்டும். சிங்களர் நலவுரிமைகள் நியாயமான அளவுக்குக் காப்பாற்றப்படுவதோடு, எமது சக பிரஜைகளில் ஒரு சாராருக்கு நியாயம் வழங்கப்படவும் வேண்டியிருக்கிறது.

எம்முன்னே ஏற்படும் முதல் பிரச்சினை இதுதான். மொழிப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் நாம் அடைய விரும்பும் இலட்சியம் என்ன? எதை நாம் அடைய முயல்கிறேம் சிங்கள மக்களில் சிலர் இந்நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே உரியதென்று எண்ணக்கூடும். சிங்கள மக்களுக்கு மட்டுமே இங்குவாழ உரிமையுண்டு; இங்கு வாழும் மற்றவர்கள் ஒன்றில் பலாத்காரமாக சிங்கள மக்களாக்கப்படவேண்டும்; அல்லது சிங்களருக்குக் கீழ்ப்படிவுள்ளவர்களாக ஆக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் எண்ணலாம். ஆனால் இந்த எண்ணத்தை வாய்விட்டுச் சொல்ல அவர்களுக்குத் தைரியங் கிடையாது. நாம் இப்படிப்பட்டவர்களை சட்டை செய்யக்கூடாது.

மறுபுறம் தமிழ் மொழிக்கு அந்தஸ்து கேட்பவரிலும் சில தீவிரவாதிகள் இருக்கின்றனர். தென்னிந்தியாவிலும், கிழக்கு ஆபிரிக்காவிலும் மலாயாவிலும் தமிழ்க்கொடி பறக்கும் நிலைமை இருக்கிறது. ஆனால் இத்

தீவிரவாதிகள் கோரிக்கைகளும் தவறுதான். நாம் ஒரேநாட்டின் சக பிரஜைகள். எங்களுக்குள் இனவேற்றுமை, மத வேற்றுமை, மொழி வேற்றுமை, பழக்கவழக்க வேற்றுமை எல்லாம் உண்டு. ஆனால் இவை எல்லாவற்றுக்கும் மேலாக நமக்கு ஒரு பொதுத்தன்மை உண்டு. தேசிய ரீதியிலும், சர்வதேசீய ரீதியிலும் எமது வேற்றுமைகளுக்கு மேலாக வற்புறுத்த வேண்டிய விஷயம் அது. அது நாம் எல்லோரும் ஒரே பொதுப் பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டிய மனித குலத்தைச் சேர்ந்தவர்களாக விளங்குகிறோம் என்பதுதான்.

இந்தச் சூழ்நிலையில் இந்தப் பிரச்சினைகளை நாம் எப்படித் தீர்ப்பது? சிங்களருக்கு நியாயம் வழங்கும் அதே நேரத்தில், இலங்கையின் பல்வேறு இனத்தினரையும் முன்னர் ஆங்கிலம் பிணைத்தது போல சிங்களத்தின் மூலம் பிணைக்கும் அதே நேரத்தில், எமது சகப் பிரஜைகளின் மதம், மொழி முதலிய தேவைகளை நாம் கவனித்துப் பார்க்கவேண்டியிருக்கிறது. சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரும் நண்பர்களாகவும், சகோதரர்களாகவும் வாழ வேண்டும். எவரும் அடிமைகளாகவோ, கீழ்ப்பட்டவர்களாகவோ வாழக்கூடாது. உண்மையில் இந்த விதத்தில்தான் பிரச்சினையை அணுகுதல் வேண்டும். இந்தவிதத்தில் பிரச்சினையை அணுகி எமது அரசாங்கக் கட்சி கடந்த பொது தேர்தலுக்கு முன்னால் மொழிப் பிரச்சினையில் செய்ததென்ன? சிங்களமே இந்நாட்டின் ஒரேயொரு உத்தியோக மொழியாக இருக்கவேண்டுமென்பது நியாயமானதும், சரியானதும் என்று நாம் கருதினோம். இலங்கையில் 70 வீதமானோர் சிங்கள மக்கள். எனவே சிங்களத்தையே உத்தியோக மொழியாக வைத்தல் நியாயமற்ற ஒரு செய்கையன்று. சிங்களத்தை ஒரே உத்தியோக மொழியாக்கும் அதே நேரத்தில் எமது சக பிரஜைகளில் ஒரு பெரிய பகுதியினர் தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியத்தையும் பயன்படுத்துவோர் என்பதை நாம் ஏற்று, தமிழ் மொழிக்கு ஒரு சரியான இடத்தை அளிக்கவேண்டும் என்பதையும் நாம் அங்கீகரித்தோம். இப் பிரச்சினையின் முடிவு இவ்விதத்தில்தான் அமைய வேண்டும், இவ்விதம் இல்லாவிட்டால் வேறு எந்த வகையிலும் இந்தப் பிரச்சினைக்கு முடிவே இல்லை என்றுதான் மக்கள் கூறுவர்.

இந்தப் பிரச்சினைக்கு முடிவு வைத்திருக்கும் கட்சிகள், எம்மிலும் பார்க்கச் சிறந்த முடிவு வைத்திருப்பதாக எண்ணிக்கொள்வோர் அவற்றை இங்கு வெளியிடாமல் வெளியே போய்விட்டார்கள். அவர்களை அந்த முடிவுகளை இங்கே வெளியிடும்படி நான் சவால் விடுக்கிறேன். அவர்களிடம் இப்பிரச்சினைக்கேற்ற தீர்ப்புகளிருந்தால் அவர்கள் அதனை வெளியிடுதல் வேண்டும். ஆனால் அவர்களோ எமது சட்டைகளுக்குப்பின் அவர்கள் ஒளிக்கிறார்களே! நாம் இந்தப் பிரச்சினையை வலது புறத்திலிருந்தும் இடது புறத்திலிருந்தும் மற்றிடங்களிலிருந்தும் வரும் தாக்குதல்களைச் சமாளித்து ஒரு முடிவுக்கு வருவதைப்பார்க்க அவர்கள் காத்திருக்கிறார்

கள். நாம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து முடித்துவிட்டால் " சரி தீர்ந்து விட்டது " மற்றப் பிரச்சினையைத் தொடங்குவோம் என்று அவர்கள் சொல்லுவார்கள். அந்தக் கட்சிகளைப்பற்றி நான் சொல்லக்கூடியது இவைதான். ஐ. தே. க. என்று வேஷமிட்டுத் திரியும் ஐக்கியமோ, தேசியமோ அற்ற கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி எல்லா வற்றைப் பற்றியும் நான் சொல்லக்கூடியவை இவைதான்.

இந்த மசோதாவை நான் மேலும் காலந் தள்ளிப் போட்டிருந்தால் ஜன நாயக இலட்சியங்களுக்கு முரணானவனுகியிருப்பேன். ஏற்கனவே இதனைப் பல நாட்கள் காலம் தாழ்த்திவிட்டோம். உத்தியோக மொழி மசோதா வுடன் இதனை நிறைவேற்றியிருத்தல் வேண்டும். ஆனால் அந்த நேரத்தில் நாம் அதனைச் செய்யவில்லை. உத்தியோக மொழி மசோதாவைத் தாம தித்து இம்மசோதாவுடன் நிறைவேற்றியிருக்கலாம். அங்ஙனம் செய்யா ததை இட்டு நான் மனம் வருந்துகிறேன். ஜனநாயகம் எவ்விதத்திலும் மீறப்பட்டது என்று யாரும் புகார் செய்ய முடியாது. எல்லாரும் பிரச் சினைபற்றி அறிவர். எந்தக் கௌரவ அங்கத்தினரும் இங்கே வந்து மசோதாவை தன் மனமார விவாதிக்க இடமுண்டு. தான் விரும்பிய கருத் துகளை வெளியிடலாம்.

இனி மசோதாவைப்பற்றிய சில வார்த்தைகள். சில அடிப்படையான கருத்துகளை நாம் மனதில் பதிக்க வேண்டும். முதலாவதாக நாம் எதனை அடைய விரும்புகிறோம்? சிங்கள ஏகாதிபத்தியத்தை நிறுவி எல்லாரை யும் பலாத்காரமாகச் சிங்களராக்கி, சகலரையும் சிங்களம் பேசுபவர்களா கச் செய்து, தமிழரை நமது பின்னால் இருப்பவர்களாக இவ்வுலகில் ஒரு பெரு நிலப்பரப்பை ஆள விரும்புகிறோமா? நமக்கு வேண்டியதென்ன என்பதை நாம் திட்டமாக வெளியிட்டுவிடவேண்டும். சிங்கள மக்களின் சிறந்த பொக்கிஷங்களைப் பாதுகாத்து அதே நேரத்தில் மற்றவர்களின் சிறந்த பொக்கிஷங்களை நியாயமான முறையில் அங்கீகரித்து, அதன் மூலம் இந்நாட்டின் சினேகம் நிறைந்த மக்கள் தொகுதியாக வாழ்வது தான்; நாட்டின் முன்னேற்றத்துக்கு எல்லாருமாகச் சேர்ந்து முயல்வது தான் நமது எண்ணம் என்றால் அது பூரணமான நியாயம் நிறைந்த ஒரு எண்ணமாகும். இஃதன்றி நாம் வேறெதனையும் விரும்பினால் அது கண்டிப்புக்கு ஆளாவதை என்னால் புரிந்துகொள்ள முடியும். நாம் தீவிர வாதிகளின் கொள்கை வழிப்போனால் அப்பொழுதும் என்னால் கண்டதைப் புரிந்துகொள்ள முடியும்.

பலருக்கு உத்தியோக மொழி என்பதின் பொருள் விளங்கவில்லை. அதைப் பலவிதமாக வியாக்கியானம் செய்கிறார்கள். உத்தியோக மொழி என்னும் கொள்கை ஒரு மேல்நாட்டுக் கொள்கை. எமது நாட்டில், உத்தி யோக மொழி என்று ஒன்று இல்லை. பல மேல்நாடுகளில்கூட சட்டரீதி யான உத்தியோக மொழி இல்லை. வழக்கத்தால் வளர்ந்தவை அவை.

சட்டத்தின் மூலம் ஒரு மொழியை உத்தியோக மொழியாகப் பிரகடனம் செய்வதன் அர்த்தம் யாது? அதன் அர்த்தம் நாம் அந்த மொழியை அவசியமான உத்தியோக வேலைகளுக்கு உபயோகிக்கப் போகிறோம் என்பதுதான். உதாரணமாக நான் ஒரு கடிதத்தை ஒரு அன்னிய நாட்டுக்கு அனுப்பினால் அக்கடிதம் உத்தியோக மொழியில் எழுதப்படும். கூட ஒரு மொழிபெயர்ப்பும் அனுப்பப்படும். நாளடைவில் அரசாங்கப் பத்திரங்கள் முதலானவை அம்மொழியில் வைக்கப்படும். கோர்ட்டாருக்கு வேண்டிய பத்திரங்களும் அவ்விதமே வைக்கப்படும். ஆனால் வசதியை அனுசரித்து ஒரு மொழிபெயர்ப்பும் வைக்கப்படலாம். ஒரு உத்தியோக மொழியின் உபயோகங்கள் இவ்விதமானவையே. உத்தியோக மொழி என்பது சகலரிடத்தும் சகல காரியங்களுக்கும் திணிக்கப்படும் மொழி அன்று. உத்தியோக மொழி என்பது பற்றி தவறான விளக்கங்கள் பரப்படுவதினாலேயே இந்தத் தொல்லைகள் ஏற்படுகின்றன.

நான் வலியுறுத்த விரும்பும் இரண்டாவது விஷயம் பின்வருமாறு: இந்த மசோதா சாதிப்பது என்ன? இம்மசோதாவில் உள்ள ஷரத்துக்கள் சிங்களமே நாட்டின் உத்தியோக மொழி என்பதற்கு மாறுபட முடியாதவை. இது மசோதாவின் முன்னுரையில் குறிக்கப்பட்டிருக்கிறது. மசோதாவில் குறிக்கப்பட்ட பிரிவுகளின் கொள்கைகள் இது சம்பந்தமாக இயற்றப்படும் விதிகளுக்கிசைய அமுலுக்கு வரும். இந்த விதிகள் இன்னும் தயாரிக்கப்படவில்லை. இந்த மசோதாவிலுள்ள விஷயம் என்ன? 2 ம் பிரிவு பின்வருமாறு கூறுகிறது :—

"ஒரு தமிழ் மாணவன், அரசாங்கப் பாடசாலையில் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலையில் கல்வி கற்பவனாக இருந்தால் அவன் 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்கக் கல்விச் சட்டத்தின்கீழ் இன்றுள்ள போதனாமொழி சம்பந்தமாகவும் இனி அமுல்நடத்தப்படும் போதனா மொழிகள் சம்பந்தமாகவும் செய்யப்பட்ட விதிகளின் பிரகாரம் தமிழ் மொழி மூலம் கல்விகற்க உரிமையுள்ளவனாவான்."

இந்தச் சட்டத்தின்கீழ் இந்தப் பிரிவுக்கு அமையும்படி விதிகளைத் தயாரிக்கும் அல்லது திரும்பத் தயாரிக்கும் எவரும் இரு நோக்கங்களைத் தமது மனதிலே கொண்டிருக்க வேண்டும். ஒன்று சிங்கள மொழியே உத்தியோக மொழி என்ற நிலைமைக்குப் பாதகம் ஏற்படக்கூடாது. அதே சமயத்தில் முன்னர் கூறிய வசதியைத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு அளிக்கவும் வேண்டும். இந்தப் பிரிவுகளின்கீழ் நாம் அவ்வாறுதான் இவ்விதிகளைத் தயாரிப்போம்.

இதே போலவே பல்கலைக் கழகம் சம்பந்தமாகவும், கீழ்க்கண்ட விஷயத்தை மனதிற் கொள்ளுங்கள். உலகில் இதற்குமுன் அடிப்படை உரிமைகள் பற்றிச் சர்வதேசச் சட்டத்தின்கீழ் நிலவிய கருத்துகளும், பின்னர் ஐ. நா. ஸ்தாபனம் தனது மனித உரிமைப் பிரகடனத்தில் கூறிய

கருத்துக்களும் மிகவும் அடிப்படையான மனித உரிமைகளில் மொழியைப் பேணுவதும் ஒன்றென வலியுறுத்துகின்றன. உதாரணமாக ஒரு சிறு பிள்ளைக்குத் தன்னிஷ்டம்போல தமிழைக் கற்கும் வசதியை அளித்துவிட்டு அப்பிள்ளை பெரியவனுகி பல்கலைக்கழகம் புகும்போது இப்போது சிங்களம் தான் போதனமொழி என்று கூறுதற்கு உங்களுக்கு உரிமையுண்டா? பல்கலைக்கழகத்திலும் நாம் அவனுக்குத் தமிழிலேதானே போதனையளிக்க வேண்டும்! அதில் ஒரு பிழையும் எனக்குத் தெரியவில்லை.

வேறு விதமான நடவடிக்கையை நாம் எடுத்தால் அது மோசமாக முடியும். பேராதனைப் பல்கலைக்கழகத்தை சிங்களத் தாபனமாக்கி விட்டால், தமிழர்கள் யாழ்ப்பாணத்திலோ வேறெங்கோ ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகத்தை நிறுவ வேண்டும் என்று கோருவார்கள். அதை நீங்கள் எதிர்ப்பது கஷ்டமாகிவிடும். இதற்கடுத்து அரசாங்க சேவையை எடுப்போம். இங்கும் தமிழில் கல்வி கற்ற ஒருவர் தான் கற்ற மொழியிலே அரசாங்க சேவைப் புகுமுகத் தேர்தலில் பங்குபற்றலாம் என்ற கொள்கையை நாம் அனுசரிக்கிறேம். அவரால் சிங்களத்தில் பதிலெழுத முடியாது. அப்படியானல் சிங்களம் ஆட்சி மொழி என்ற நிலை என்னவாயிற்று என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். இப்படிப் பரீட்சைக்கு இருக்கும் அவர் தற்காலிகமாக வேலையில் நியமிக்கப்படலாம். ஆனல் ஒரு குறிப்பிட்ட கால எல்லையுள் அவர் சிங்களத்தில் போதிய தேர்ச்சி பெறுதல் வேண்டும். அல்லது அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார். அவருக்குப் பரீட்சைக்குத் தோற்றும்போதே சிங்களம் தெரிந்திருந்தால் புகுமுகத் தேர்விலேயே இதைப் பரீட்சித்துத் தீர்த்துவிடுவது இலகுவாய் இருக்கும். எதிர்காலத்தில் சிங்களம் தமிழ்ப் பாடசாலைகளில் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படலாம். அப்பொழுது புகுமுகத் தேர்வில் சிங்களத்தில் ஒரிரு வினுத்தாள்களைத் தயாரிக்கலாம். ஆனல் இதற்குக் காலம் செல்லும். இந்த நிலை இயற்கையாக மலரும். இதில் எவ்வித தவறும் எனக்குத் தெரியவில்லை.

திரு. மெத்தானந்தா அரசாங்க சேவையில் விகிதாசாரத்துக்கு முரணை வகையில் நியமனங்கள் செய்யப்படுவதாகப் பெரும் புகார் செய்து வருகிறுர். அவர் ஜனத்தொகையின்படி தமிழர்களுக்கு இருக்க வேண்டிய அளவிலும் பார்க்க அதிக பதவிகள் அரசாங்க சேவையில் இருக்கின்றன என்று குறை கூறுகிறுர். இந்தச் சட்டம் அவர்களுக்குச் சார்பாக இருக்கிறதாக அவர் தெரிவிக்கிறுர். அது மெய்யல்ல. மெத்தானந்தரின் மற்றக் கூற்று ஜனத்தொகை விகிதாசாரத்தின்படி அரசாங்க பதவிகள் பங்கிடப்படவேண்டுமென்பதே. அதை இந்த மசோதாவின்கீழ் நாம் கவனிக்க முடியாது. மற்ற சமூகத்தினர் விரும்பினல் சிங்களர் இதற்கு மறுப்புச் சொல்லமாட்டார்கள் என்பது திண்ணம். உண்மையில் பல தமிழர்கள் அதனை வலியுறுத்துகின்றனர். இவர்களில் ஒருவரை நான் பெயரிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அவர் செனேற்றர் நடேசனே ஆவர்.

தபாற் போக்குவரத்து சம்பந்தமாகச் செய்யப்படும் விதிகள் இரண்டு இலட்சியங்களுக்கு அமைய வேண்டும். அவையாவன சிங்களம் ஆட்சி மொழி என்பதற்குக் குந்தகம் ஏற்படக்கூடாது. அதே சமயத்தில் தமிழ் தெரிந்தவர்களுக்கேற்ற வசதியும் செய்யப்படவேண்டும்.

இப்படிப்பட்ட விதிகளை எப்படி இயற்றலாம் என்பதைப் பார்ப்போம். நான் எந்தவிதமான விருப்பு வெறுப்பும் இன்றிப் பேசுகிறேன். சிலருடைய மனதில் இருக்கும் பயத்தைப் போக்கும் நோக்கத்துடன் நான் பேசுகிறேன். 1960 டிசெம்பர் வரை ஆட்சி மொழிச் சட்டத்தின்கீழ் இன்றுள்ள நிலை பேணப்படும். ஆகவே அத்தேதிவரைக்கும் எவ்வித கஷ்டங்களும் எழும்பா. 1960 டிசெம்பர் 31ந் தேதிக்குப் பின் நாம் என்ன செய்யப் போகிறோம்? இதுதான் இப்பொழுது கேட்கப்படும் கேள்வி. எந்தத் தமிழ் மகனும் தமிழ் மொழியில் கடிதம் எழுத உரிமைபெற்றிருக்க வேண்டும். ஆனால் சிங்களத்தின் ஆட்சிமொழி அந்தஸ்து பேணப்படுதலும் வேண்டும். சிங்களத்தில் மறுமொழி அனுப்பலாம். ஆனால் தமிழ்க் கனவானின் நன்மையை முன்னிட்டு தமிழில் அதன் மொழிபெயர்ப்பு அல்லது சாராம்சம் அனுப்பப்படுதல் வேண்டும். ஆனால் சிங்களம் தமிழ்ப் பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதால் தமிழில் அனுப்புவதை நாம் மெதுவாக நிறுத்திவிடலாம். இதில் என்ன பிழை? இதில் ஏது பிழை உள்ளது என்பது எனக்கு விளங்கவில்லை.

சில பயங்கரமான கதைகள் சொல்லப்படுகின்றன. சிங்களக் கிராமத்தில் இருக்கும் ஒரு தமிழர் தமிழில் கடிதமெழுதுவார் என்றும் பதில் சிங்களத்தில் அனுப்பப்பட்டால் எத்துணை இன்னல் விளையும் என்றும் கேட்கப்படுகிறது. திரு. மெத்தானந்தா இதுசம்பந்தமாகப் பேசுகையில் 5,000 தொடக்கம் 10,000 வரை தமிழ் இலிகிதர்கள் மொழிபெயர்ப்பு வேலைக்காகவே நியமிக்கப்படவேண்டுமே என்று குறிப்பிடுகிறார். இந்த விஷயங்களை நாம் அனுபவத்தில்தான் பார்க்க வேண்டும். அரசாங்கம் தனது மொழிக் கொள்கையை அமுல் நடத்தத் துணிந்துவிட்டது. அனுபவம் எப்படி இருக்கிறது என்பதை இருந்து பார்ப்போம். நாம் செய்வது தவறானால் நாட்டு மக்களிடம் அதைத் திருத்த மருந்துண்டு. நாம் செய்வது சரியே என்று ஜனங்கள் கருதினால் ஒருவருடத்தில் மொழிப்பிரச்சினையே இல்லாது போய்விடும். அரசியல் வேட்டைக்கு மொழிப்பிரச்சினை உதவாததாகிவிடும். ஜனங்கள் மொழிக்காகப் பலியிடப்படுவதும் நின்றுவிடும்.

ஐந்தாம் பிரிவில் வடக்கு கிழக்கு மாகாணங்களைப்பற்றிக் குறிக்கப்படுகிறது. இந்த மாகாணங்களில் சில நிர்வாக விஷயங்களை நாம் குறிப்பிட்ட விதத்தில் நடைபெறுவதற்கு விடப்போகிறோம். ஆனால் இது விஷயத்தை நாம் நன்கு ஆராய வேண்டும். எந்த நிர்வாக அலுவல்களை எவ்வாறு தமிழில் நடத்துவது? சிலர் ஏன் வடக்கு கிழக்கு மாகாணங்களை மட்டும் குறிப்பிடுகிறீர்கள் என்று கேட்கிறார்கள். ஒரே சமுதாயத்தைத்

தானே நீங்கள் கருதுகிறீர்கள். அதுவல்ல விஷயம். தமிழ் மக்கள் பலர் அங்கிருக்கின்றனர். இன்னொரு கேள்வி கேட்கப்படுகிறது. தமிழ்ப் பிரதேசத்திலிருக்கும் சிங்களரின் நிலை என்ன? சிங்களத்தில் அலுவல் நடத்த விரும்பும் எல்லோரும் வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமல்ல இலங்கை பூராவுமே அவ்வாறு செய்ய முடியும். அந்த உரிமை இருக்கிறது. அதனை உபயோகிக்கலாம். இதற்கேன் இவ்வளவு கூச்சல்! மற்றப்பிரிவுகள் மாமூலானவை. அவைபற்றி இங்கு நான் குறிப்பிட விரும்பவில்லை.

கடந்த இரண்டு வருடங்களாக இவ்வரசாங்கம் மொழிக் கொள்கையை அமுல்நடத்த முயன்றிருக்கிறது. இது இலகுவான ஒன்றாகவோ இன்பமான ஒன்றாகவோ இருக்கவில்லை. நாம் கடந்த தேர்தலுக்கு முன்னர் வெளியிட்ட கொள்கைகளுக்கு ஏற்ப அதை அமுல்நடத்த முயன்றோம். சிங்கள மொழிக்கு அதற்குரிய அந்தஸ்தையும் தமிழ் மொழிக்கு நாம் குறிப்பிட்ட அந்தஸ்தையும் கொடுக்க முயன்று வருகிறோம். இதனை இரு தரப்பிலும் எதிர்க்கிறார்கள். தமிழர் தரப்பிலிருந்தும் சிங்களர் தரப்பிலிருந்தும் இந்தப்பக்கத்திலிருந்தும் அந்தப்பக்கத்திலிருந்தும் இடி விழுகிறது. சகல விதமான ஏச்சு வார்த்தைகளும் என்மீது உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. சிங்களத்தில் நான் ஒரு சிங்களத் துரோகி என்று அநாமதேயக் கடிதங்கள் வருகின்றன. தமிழரைப் பொறுத்தவரையில் தமிழ் இனத்தையே நான் அழித்துவிட்டேனாம்! சகலரும் என்னை ஒழிக்க விரும்புகிறார்கள். என்னை ஒழிக்க விரும்புவோர் என்னை ஒழித்துக் கட்டினால் நான் அதற்குக் கோபம் கொள்ளமாட்டேன். ஆனால் நானும் என் அரசாங்கமும் நாங்கள் செய்வது சரி என்று நம்பித்தான் அவற்றைச் செய்கிறோம். நாம் செய்கிறோம். நாம் செய்தது சரியா பிழையா என்பதைத் தகுந்த தருணத்தில் தெரிவிக்க நாங்கள் இந்நாட்டு மக்களுக்கு வசதியளிப்போம். ஆனால் அதற்கிடையில் அச்சமின்றி, நேர்மையான மனதோடு இயன்றவரை ஆட்சி புரிவோம். மிரட்டல்களுக்குப் பயப்படாது, ஜனநாயக ரீதியில் நமது செயல் சரியா பிழையா என்பதைத் தீர்க்கும் பொறுப்பை மக்களிடம் நாளடைவில் விட உறுதிகூறி எமது அரசாங்கத்தை நடத்திச் செல்வோம்.

# 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, அரசகரும மொழிச்சட்டம்

*சிங்கள மொழியை இலங்கையின் ஒரே அரசகரும மொழியாக விதித்தற்கும், குறிப்பிட்ட சில இடைக்கால ஏற்பாடுகள் செய்வதற்குமான சட்டம்*

---

*[அனுமதியளித்த திகதி : ஜூலை 7, 1956.]*

*இராணியாரது மகா மகத்துவம் பொருந்திய மாட்சிமையினுலும் இப்போது கூட்டப்பெற்ற இலங்கைப் பாராளுமன்றத்தின் செனேற்றுச் சபையினதும் சனப்பிரதிநிதிகள் சபையினதும் ஆலோசனையோடும் சம்மதத்தோடும், அன்னுர் அதிகாரத்தோடும் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக.*

**சுருக்கப் பெயர்**

*1. இந்தச் சட்டம் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டம் என வழங்கும்.*

**சிங்கள மொழி ஒரே அரசகரும மொழியாக விருத்தல்**

*2. சிங்கள மொழி இலங்கையில் ஒரே அரசகரும மொழியாக விருக்கும். எனினும், இச்சட்டம் அமலுக்கு வந்தவுடன், அரசகரும நோக்கமெதற்காகவும் சிங்கள மொழியை மாத்திரம் உபயோகிக்கத் தொடங்குவது அநுபவ சாத்தியமன்று என அமைச்சர் கருதுமிடத்து, மேற்கூறிய அரசகரும நோக்கத்துக்காக இதுவரை உபயோகிக்கப்பட்டு வந்த மொழி அல்லது மொழிகள், 1960 ம் ஆண்டு டிசம்பர் முப்பத்தொராந் திகதி முடிவடைதற்கு முன்னர் கூடிய விரைவில் தேவையான மாற்றம் நடைமுறைக்குக் கொண்டுவரும்வரை, மேற்கூறியவாறே தொடர்ந்து உபயோகிக்கப்படுவெரலாம். அத்தகைய மாற்றம் நிர்வாகக் கட்டளை மூலம் செய்யமுடியாதிருந்தால் அத்தகைய மாற்றம் செய்வதற்காக இச் சட்டத்தின்படி ஒழுங்குவிதிகள் வகுக்கலாம்.*

ஒழுங்குவிதிகள்

3. (1) இச்சட்டத்தின் பிரகாரம் ஒழுங்கு விதிகள் வகுக்க அதிகாரம் வழங்கப்பெற்ற சகல விஷயங்கள் சம்பந்தமாகவும், இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் வழிவகை வகுக்கும் நோக்கமாகப் பொதுவாகவும் ஒழுங்கு விதிகளை அமைச்சர் வகுக்கலாம்.

(2) (1) ம் உபபிரிவின் பிரகாரம் செய்யப்படும் ஒழுங்கு விதி எதுவும், சனப்பிரதிநிதிகள் சபையினதும் செனெற்றுச் சபையினதும் அங்கீகாரம் பெற்று, அத்தகைய அங்கீகாரம் கசெற் பத்திரிகையில் வெளியிடப்பட்டு அறிவிக்கப்படாதவரை அமல் நடத்தப்படமாட்டாது.

# 1958 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தமிழ் மொழிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

*[அனுமதியளித்த திகதி : செப்ரெம்பர் 4, 1958]*

*தமிழ் மொழியை உபயோகிக்க ஏற்பாடு செய்வதற்கும் அதனோடு சம்பந்தப்பட்ட அல்லது அதற்கு இடை நேருகின்ற விடயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான சட்டம்.*

*(அனுமதியளித்த திகதி செப்ரெம்பர் 4, 1958)*

---

*1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, அரசகரும மொழிச் சட்டத்தின் படி சிங்கள மொழி இலங்கையில் ஒரேயொரு அரசகரும மொழியாகப் பிரகடனஞ் செய்யப்பட்டிருப்பதாலும் : மேற்சொல்லிய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரண்படாதவாறு தமிழ் மொழி உபயோகத்துக்கு ஏற்பாடு செய்ய வழிவகுக்கவேண்டியிருப்பதாலும் :*

*இராணியாரது மகா மகத்துவம் பொருந்திய மாட்சிமையினுலும் இலங்கைப் பாராளுமன்றத்தில் இப்போது கூட்டப்பெற்ற செனெற்றுச் சபையினதும், சனப் பிரதிநிதிகள் சபையினதும் ஆலோசனையோடும் சம்மதத்தோடும் அன்னர் அதிகாரத்துடனும் பின்வருமாறு சட்டமாக்கப் படக் கடவது :—*

*சுருக்கப் பெயர்*

*1. இந்தச்சட்டம் 1958 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) ச் சட்டம் என வழங்கும்.*

*போதனமொழியாகத் தமிழ்*

*2. (1) 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, கல்விச் சட்டத்தின் பிரகாரம் இப்போது, அமலில் இருந்து வரும் அல்லது இனிமேல் அமல் செய்யப்படும் விதிகளுக்கு அமைய, தமிழ் மொழியில் போதனை பெற, ஓர் அரசாங்கப் பாடசாலையில் அல்லது அரசாங்க உதவிபெறும் பாடசாலையில் படிக்கும் பிள்ளைக்கு உரிமையுண்டு.*

(2) இலங்கைப் பல்கலைக் கழகத்தில் சிங்கள மொழி போதனு மொழி யாக்கப்படும்போது, 1942 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படியும், அதன்கீழ் வகுத்த இதர சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின்படியும், பல்கலைக்கழகத்திற் சேருவதற்கு முன்னர் தமிழ்மொழி மூலம் கல்விகற்ற மாணவருக்குப் பல்கலைக்கழகத்திலும், தமிழ் மொழி போதனு மொழியாகவிருக்கும்.

**அரசாங்க சேவையிற் சேர்தற்கான பிரவேச பரீட்சையைத் தமிழ் மொழி மூலம் எடுக்கலாம்.**

3. தமிழ்மொழி மூலம் கல்விகற்ற ஒருவர், அரசாங்க சேவையில் சேர்வதற்கான பிரவேசப் பரீட்சையில் அம்மொழியிலே பரீட்சை எடுப் பதற்கு உரிமையுண்டு. எனினும், இது சம்பந்தமாக இச்சட்டத்தின் கீழுள்ள விதிகளுக்கமையப் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டாக வேண்டும். அவையாவன :

(அ) இலங்கையின் அரசகரும மொழியில் போதிய அளவு அறிவு பெற்றிருக்க வேண்டும் ;

(ஆ) அரசாங்க சேவையிற் சேர்ந்தபின், அல்லது குறிப்பிட்ட கால வரையறைக்குள் இவ்வறிவினைப் பெற்றுவிட வேண்டும்.

ஆனுல், தமிழ் மொழியில் போதிக்கும் பாடசாலைகளில் சிங்கள மொழி யைப் படிப்பிக்கப் போதிய வசதிகள் இருக்கின்றன என்றும், இப்பிரிவின் மேற்போந்த ஏற்பாடுகளில் (ஆ) வாசகத்தை நீக்குதலால் தகாத கஷ்டம் ஏற்படாது என்றும் அரசாங்கம் திருப்திப்படுமிடத்து, அத்தகைய வாசகம் நடைமுறையில் இருக்கமாட்டாது என்று இச்சட்டத்தின்கீழ் செய்யப் பட்ட விதிமூலம் ஏற்பாடு செய்யப்படலாம்.

**கடிதத் தொடர்புக்குத் தமிழ்மொழியை உபயோகித்தல்.**

4. உத்தியோகபூர்வமான முறையில் செயலாற்றும் உத்தியோகத்தர்கள் நீங்கலாக, தமிழ் மொழியில் கல்வி பயின்றவர்களுக்கும் உத்தியோக பூர்வமான முறையில் செயலாற்றும் உத்தியோகத்தருக்குமிடையில் அல்லது வடக்கு அல்லது கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூர் ஆட்சியின ருக்கும் உத்தியோக பூர்வமான முறையில் செயலாற்றும் உத்தியோகத் தருக்குமிடையில், நடைபெறும் கடிதப் போக்குவரத்து, விதிக்கப்பட்ட வாறு, தமிழ் மொழியில் நடைபெறலாம்.

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விதிக்கப்பட்ட நிர்வாகத் தேவைகளுக் காகத் தமிழ் மொழியை உபயோகித்தல்.**

5. விதிக்கப்பட்ட நிர்வாகத் தேவைகளுக்கு அரசகரும மொழியினை உபயோகிப்பதைப் பாதிக்காத முறையில், இந்தச் சட்டத்தின் இதர

ஏற்பாடுகளின்படி தமிழ்மொழி உபயோகத்துக்கான நோக்கங்களுடன், அம்மொழி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விதிக்கப்பட்ட நிர்வாகத் தேவைகளுக்காகவும் உபயோகிக்கப்படலாம்.

ஒழுங்கு விதிகள்

6. (1) இச்சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் அமல் நடத்துவதற்காக அமைச்சர் ஒழுங்கு விதிகளை வகுக்கலாம்.

(2) (1) ம் உபபிரிவின் பிரகாரம் செய்யப்படும் ஒழுங்குவிதி எதுவும், சனப்பிரதிநிதிகள் சபையினதும் செனெற்றுச் சபையினதும் அங்கீகாரம் பெற்று, அத்தகைய அங்கீகாரம் கசெற் பத்திரிகையில் வெளியிடப்பட்டு அறிவிக்கப்படாத வரை அமல் நடத்தப்பட மாட்டாது.

**1956 ம் ஆண்டின் 33 ம் இலக்கச்சட்டத்தின் 2 ம் பிரிவின் ஏற்பாட்டுக் கிணங்க மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படவிருக்கும் வழி வகைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியது இச்சட்டம்.**

7. 1960 ம் ஆண்டு டிசம்பர் முப்பத்தொராந் திகதி வரையுள்ள கால எல்லைக்குள், 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்கச் சட்டத்தின் 2 ம் பிரிவின் ஏற்பாட்டுக்கிணங்க மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட விருக்கும் வழிவகைகளுக்கு அமைவாக, இச்சட்டம் அமலில் இருக்கும்.

**சொற்பொருள் விளக்கம்.**

8. இந்தச் சட்டத்தில், சந்தர்ப்பத்துக்கிசைய வேறுவகையில் பொருள் கொள்ளவேண்டியிருந்தாலன்றி—

"உதவிபெறும் பாடசாலை", "அரசாங்க பாடசாலை" என்பவை, 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்க கல்விச்சட்டத்திற் கொடுக்கப் பட்டுள்ள அதே கருத்தைக் கொண்டிருக்கும்.

"உள்ளூர் ஆட்சி" என்பது எந்த ஒரு முனிசிபல் சபை, நகர சபை, பட்டண சபை, அல்லது கிராமச் சங்கத்தையும் குறிக்கும்.

"உத்தியோகத்தர்" என்பது கவர்னர் ஜெனரல், அல்லது யாராவது ஓர் அமைச்சர், பாராளுமன்றக் காரியதரிசி, அல்லது அரசாங்க சேவை உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

"விதிக்கப்பட்ட", என்பது இச்சட்டத்தின்படி செய்யப்பட்ட ஒழுங்கு விதியால் விதிக்கப்பட்ட எனப் பொருள்படும்.